செந்தமிழ்

தொகுதி :	திருவள்ளுவர் 2004 ஆம் ஆண்டு	பகுதி
68	பிரமாதீச மார்கழி டிசம்பர் 1973	4

1. 'ஒரே இலக்கு' ... 1
தவத்திரு. கவியோகி.
சுத்தானந்த பாரதியார்

2. 'நல்ல தமிழன்' ... 2
முத்தமிழ்க் காவலர்.
கி. ஆ. பெ. விசுவநாதம்

3 'தமிழ்த்தாயின் சொந்த மகன்' ... 3
டாக்டர். தமிழண்ணல்

4 'ஏடுபுகழ் இலக்குவனர்' ... 4
புலவர்மணி தி. கி, சுந்தரமூர்த்தி

5. 'காப்பிடம் ஆய்ந்த காவலன்' ... 6
கவிஞர். ப. இராமலிங்கம்

6. 'டாக்டர். சி. இலக்குவனர் மறைவு' ... 9
புலவர். சி. அரசப்பனர்

7. 'இரங்கற்பா' ... 12
வித்துவான் சு. சுப்பையர்

8. 'தமிழ்மலை சாய்ந்தது' ... 17
செஞ்சொற்பாவலர். ப. சங்கரலிங்கம்

9. 'இரங்கற் பதிகம்' ... 21
ஞா. தேவநேயன்

10. 'என்று காண்போம்' ... 24
பேராசிரியர். ஏ. ஆர். பொன்னையா
எம். ஏ., பி. எல்.

11. ‘தமிழ்நெஞ்சம் குடிபுகுந்த அறிஞர் கோமான்’ ... 26
புத்தனேரி. ரா. வேங்கடாசலம்

12. ‘மறவனே என்றும் மறவோம்’ ... 28
புலவர். தொல்காப்பியன்

13. ‘இரங்கற் பாக்கள்’ ... 30
புலவர். கு. மா. திருநாவுக்கரசு, பி. ஏ,

14. ‘இரங்கற் பாக்கள்’ ... 32
அன்புகருணையானந்தம்

15. ‘நன்றியினைச் செலுத்துவோம் நாம்’ ... 33
புலவர். கு. மதுரகவி. இராமானுசம்

16. ‘இலக்குவனார் அவர்களுக்கு அஞ்சலி’ ... 36
நா. க. மாணிக்கம்

17. ‘என்றும் வாழ்வான்’ ... 38
மு. செ. இராமசாமி, எம். ஏ.,

18. ‘டாக்டர் சி. இலக்குவனார்’ ... 42
டாக்டர். வ. சுப. மாணிக்கம்

19. ‘பேராசிரியர் இலக்குவனார்’ ... 43
புலவர். ந. இராமநாதன், பி. ஓ. எல்,

20. ‘இசை நட்ட இலக்குவனார் வாழ்க’ ... 47
டாக்டர். தி. முருகரத்தினம்

21. ‘சி. இலக்குவனார்’ ... 50
பேராசிரியர். வீ. ப. கா. சொல்லழகன், மு.க.

22. ‘எந்தை ஈந்த இனிய நினைவுகள்’ ... 53
தமிழ்த் தொண்டன். ஆ. ஆண்டியப்பன்

23. ‘பண்டாரகர் சி. இலக்குவனார்’ ... 58
கு. சொல்விளங்கும் பெருமாள்

24. ‘கல்லூரி மாணவர் இலக்குவனார்’ ... 68
புலவர். சி. இராமசாமி

25. ‘புரட்சியாளர் இலக்குவனார்’ ... 75
பேராசிரியர். வீ. முத்துச்சாமி, எம். ஏ.

26 ‘எதிர் நீச்சலில் எரிகதிர் நித்திலம்’ 81
பண்டித-வித்துவான். கி. பொன்னுராமன்



குறள் நெறியால் முரசொலித்து
குவலயமெல்லாம் குளிர்தமிழ் விளங்கச்செய்த

இலக்கணச் செம்மல்,
இருபதாம் நூற்றுண்டு தொல்காப்பியனுர்
பண்டாரகர். சி. இலக்குவனுர்

உளங்கனிந்த நன்றி

*

சங்க இலக்கிய வளர்ச்சிக்கும், இலக்கண வரம்பிற்கும், பழந்தமிழ்நாட்டின் வரலாற்று ஆராய்ச்சிக்கும் உற்றுழி உதவி ஓங்குபுகழ் துலங்க இலங்கிவரும் 'செந்தமிழ்' இதழுக்கு 68 வது ஆண்டு முற்றுப்பெறுகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

சொற்சுவை, பொருட்சுவை தோன்றப் பாமாலை படைத்தளித்த பாவலர், நாவலர்களுக்கும்; இலக்கியம், இலக்கணம், வரலாற்று ஆராய்ச்சிகளை ஒல்லும் வகையில் - தமது நெஞ்ச நினைவு வடிவங்களை - உவந்தளித்து வந்த, கைமாறு கருதாத் தமிழ்ச் சான்றோர்களுக்கும் வணங்கும் தமிழால் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். தென்னாட்டுள் வாழ்ந்த தெள்ளு தமிழ்ப் புலவரின் நெஞ்சையெல்லாம் அள்ளித்திறைகொண்ட தன்னேரில்லாத தமிழ்க்குரிசில், சேதுகுலச் செங்கதிர், கன்னனை மிஞ்சிய கார்மேகம் வள்ளல் பாண்டித்துரைத் தேவரவர்களின் மங்காத மாண்பின் வழி உளமார்ந்த நன்றியினையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

அரை நூற்றாண்டிற்கும் மேலாக வணிக நோக்கம் கருதாது தமிழ்நலம் பேணி, தனித்தமிழால் தமிழ் நலம் காத்து, தரணியெங்கும் தமிழ்மணம் பரப்பிவரும் செந்தமிழ் ஏட்டின் ஆண்டுக் கட்டணமான உரூபாய் மூன்றினைக் கடுமையான காகித விலையேற்றத்தின் காரணமாகப் புத்தாண்டிலிருந்து உரூபாய் ஐந்தாக உயர்த்த எண்ணியுள்ளோம். இச்சிறு தொகையைப் பெரும் விலையேற்றமாகக் கருதாது தமிழ்ப் பெருஞ் சான்றோர்கள் என்றும் உற்றதுணையாய் இருப்பார்கள் என்று நம்புகிறோம்.

செந்தமிழ் செழித்தோங்கிட தனித் தமிழால் கருத்துக் குவியல்களைத் தொடர்ந்து வழங்கி தளரா நிலையில் தமிழ்ப் பணிபுரியுமாறு என்றுமுள்ள பணிவன்புடன் விரும்பி, வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம்.

இவண்,

ஆ. ஆண்டியப்பன்
பதிப்பாசிரியர்
'செந்தமிழ்'

பண்டாரகர். **சி. இலக்குவனார்**

"என் வாழ்க்கையே தமிழ் நலம் நாடிய போராட்டக் களம்தான். இளமையில் வறுமையோடு போராடினேன். சாதியோடு போர்; சமயத்தோடு போர்; மூடநம்பிக்கைகளோடு போர்; தமிழ் உரிமைக்ாகப் போர்! போர்! என்றும் ஓயாத போர்தான்."

❋ ❋ ❋

"வடநாட்டில் சில மொழியாளர்கள் தத்தம் மொழியிலேயே ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுத வாய்ப்பளித்து விட்டனர். ஆங்குள்ள பல நிலைகளிலும், புகுமுக வகுப்பு முதல் புத்தாராய்ச்சிப் பட்டம் வரையில் தாய்மொழியைப் பயன்படுத்தும் நிலை தோன்றிவிட்டது. இங்கோ—தமிழ்நாட்டில்—புகுமுக வகுப்பில்கூட முழுதும் தமிழாக இல்லை. தமிழைப் பயிற்று மொழியாகவும், ஆராய்ச்சிக் கட்டுரை எழுதும் மொழியாகவும் ஆக்கித் தமிழிலேயே பட்டமளிக்கும் நாள் என்று வருமோ?"

★

"தொல்காப்பியத்தை முதன் முதலாக ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து உலகுக்கு உதவி மகிழ்ந்த ஒரே தமிழ்ப் புலவர் இலக்குவனர். தமிழும், தமிழரும், தமிழகமும் தோன்றிய காலந்தொட்டு எவரும் செய்யத் துணியாத அரும்பணி இது."

∘∘ ∘∘ ∘∘

"தமிழாசிரியர்களில் இலக்குவனர் தப்பிப் பிறந்தவர் எனலாம். காரணம் அவர் தமிழால் வாழாமல் தமிழுக்காகவே வாழ்ந்து, தமிழுக்காகவே உழைத்து, தமிழுக்காகவே சிறையும் சென்றவர் என்பதே."

முத்தமிழ்க்காவலர். கி. ஆ. பெ. விசுவநாதம்.

ஒரு நல்ல "டாக்டர்"

7—8—64. ஆம் நாள் திருநகர் மு. மு. உயர்நிலைப் பள்ளியில் பேராசிரியர் 'டாக்டர்' பட்டம் பெற்றதற்குப் பாராட்டு விழா நிகழ்ந்தது. அப்பொழுது தலைமைதாங்கி யிருந்த பள்ளித் தலைமையாசிரியர் திரு. இராசாராம் பாண்டியன் அவர்கள் பேராசிரியர் பண்பு, அறிவுச்சிறப்பு, தொண்டு, ஆகியவற்றை விரித்துரைத்தார். அப்பொழுது, "எங்களுக்கெல்லாம் தமிழ் அறியாமை நோய் உள்ளது. அந்நோயைத் தீர்ப்பதற்கு ஒரு நல்ல டாக்டராலேயே முடியும். அதனால்தான் பேராசிரியர் சி. இலக்குவனார்க்குப் பல்கலைக் கழகம் டாக்டர் பட்டம் வழங்கியுள்ளது. அவர் எங்களுக்குத் தமிழ் இலக்கண இலக்கிய மருந்தளித்து அறியாமை நோயை நீக்குவார் என்று நம்புகின்றேன் என்றார்.

ஆராய்ச்சி நூலும் நெய்யும்

12—8—64 ஆம் நாம் பேராசிரியர் 'டாக்டர்' பட்டம் பெற்றதைப் பாராட்டி மதுரை 'மிட்லண்ட்' விடுதியில் சட்டமன்றத் தலைவர் திரு. செல்லப்பாண்டியன் தலைமையில் விருந்தளிக்கப் பெற்றது. அதற்குப் பதிலுரைக்கும் போது பேராசிரியர் கூறிய ஒரு கருத்து:

பசுவாங்கிப் புல்போட்டுப் பால்கறந்து வெண்ணெய் எடுத்து நெய்யாக்கி உண்பது முறைமையானதுதான். நல்லதும்தான். அவ்வாறு செய்ய இயலாதவர்களும் நெய்யை வாங்கி உண்பது இல்லையா! அது போன்றதுதான் இலக்கிய இலக்கணங்களைத் தாமே ஆய்ந்து தெளிதற்குப் பொழுது இல்லாதவர்கள் அது பற்றி ஆய்ந்தோர் நுல்களைப் பயின்று பயன் பெறுவது. நெய் வாங்கிப் பசுவின் பயனைப் பெறுவது போல் ஆராய்ச்சி நூல்களைக் கற்றே இலக்கியத் திறனையும் இன்பத்தையும் பெறலாம்.

வழங்கியவர் : புலவர் இரா. இளங்குமரன்.

இருபதாம் நூற்றாண்டு எரிகதிர்த் திலகமாம்

பண்டாரகர் **சி. இலக்குவனார்** மறைவு குறித்து

அறிஞர் பெருமக்களின்

இரங்கற்பாக்கள்

ஒரே இலக்கு

தவத்திரு கவியோகி
சுத்தானந்த பாரதியார்

தமிழே இலக்காய்த் தமிழர் உரிமைத்
தொண்டே குறிப்பாய் தொல்காப் பியரின்
பண்டை வீரப் பண்பா டுயிராய்
பிறமொழி யாக்கம் பிளந்து கிளர்ந்து
தமிழை முன்னேற்றும் தறுகணே வாழ்வாய்
ஒவ்வொரு முச்சையும் செவ்விய பணிசெய
ஊக்கிய இலக்காம் இலக்மப் புலவனின்
போம்உடல் போயினும் பொலிவறி வான
தீம்உடல் தமிழர் பூம்வுள மாவதே
ஒரேஇ லக்குடன் உயிர்த்த இலக்குவர்
தமிழ்இ னத்திலும் தமிழர் மனத்திலும்
அரியணை வகிக்கிறார் ஆணை புரிவோம்.

நல்ல தமிழன்

பேராசிரியர் டாக்டர் சி. இலக்குவனர் எம்.ஏ., பி.எச். டி அவர்கள் ஒரு நல்ல தமிழன். எனது நல்ல நண்பர்களிலும் ஒருவர். அவரது தமிழ்ப் பற்றும், தொண்டும் என்றென்றும் மறக்க முடியாதவை.

தமிழாசிரியர்களில் அவர் தப்பிப் பிறந்தவர் எனலாம், காரணம் அவர் தமிழால் வாழாமல் தமிழுக்காகவே வாழ்ந்து. தமிழுக்காகவே உழைத்து, தமிழுக்காகவே சிறையும் சென்றவர் என்பதே.

பணி புரிந்துகொண்டிருக்கும் பொழுதே ஒரு தமிழ் வார இதழை நடத்திய புலவர் இவர். பணிபுரிந்துகொண்டே அரசாங்கத்தின் போக்கைக் கண்டித்த புலவர் இவர். பணிபுரிந்துகொண்டிருக்கும் பொழுதே அமைச்சர்களின் கருத்தை மறுத்துப் பேசிய புலவர் இவர். இவரது அஞ்சா நெஞ்சமும், அழுத்தமான சொல்லும், துணிவான செயலும் பழங்காலப் புலவர் பெருமக்களை நமக்கு நினைவூட்டுவன.

தொல்காப்பியத்தை முதன் முதலாக ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து உலகுக்கு உதவி மகிழ்ந்த ஒரே தமிழ்ப் புலவர் இவர். தமிழும், தமிழரும், தமிழகமும் தோன்றிய காலந்தொட்டு எவரும் செய்யத் துணியாத அரும்பணி இது.

''குறள் நெறி'' அவரது வார இதழ். குறள் நெறி அவரது வாழ்க்கை நெறி. குறள்நெறி அவரது தொண்டின் அறிகுறி. திருக்குறளும், தொல்காப்பியமும் உள்ளவரை அவரது புகழ் நிலைத்து நிற்கும்,

சென்ற சில ஆண்டுகளில் டாக்டர் சி. இலக்குவனர் அவர்கள் தமிழக மக்களிற் சிலருடைய அன்பைப் பெறத் தவறிவிட்டார். அது அவரைத் தமிழக மக்கள் நன்கு பயன்படுத்திக்கொள்ளத் தவறிவிட்டதன் விளைவு. இது தமிழகத்தின் தீயூழே ஆகுல்.

அவரது இழப்பு அவரது குடும்பத்திற்கும், எனக்கும் மட்டுமல்ல, தமிழ்கூறும் நல்லுலகத்தின் பேரிழப்பேயாகும். ஆதலின் யார்? எவருக்கு? ஆறுதல் கூறுவது? மெல்ல நகர்ந்துசெல்லும் காலந்தான் நம்மனைவர்க்கும் நல்லாறுதல் அளிக்கவேண்டும்.

அவரது ஆன்மா சாந்தியடையட்டும்.

திருச்சிராப்பள்ளி, 8.
21—10—73

தங்களன்பிற்குரிய,

கி. ஆ. பெ. விசுவநாதம்.

தமிழ்த் தாயின் சொந்த மகன்

—தமிழண்ணல்

செந்தமிழைக் காப்பதற்கு முந்துமுள்ளம்
சிங்கத்தின் பெருநோக்கம் தமிழியக்கத்
தந்தையெனும் இலக்குவனார் மறைந்தார் அந்தோ!
தமிழ்த்தாயும் கரைந்துருகி வருந்தல் காணீர்!
வெந்துயரில் மூழ்குகிறோம் தமிழின் தாழ்வை
விளையாட்டாய்க் கூறிடினும் பொறுத்திடாத
சொந்தமுறு மகனலவோ? தமிழாம் தாயைச்
சோகமுற விட்டகன்ற காரணம் என்?

எதைமறந்த போதிலும்நீர் தமிழ்மறந்தே
இருந்ததில்லை யேஐயா? தமிழினுக்குச்
சிதைவுறவே எவர் முயன்ற போதிலும்நீர்
சிறிஎழத் தயங்கியதே இல்லை ஐயா!
புதைபொருளாம் நுமதுணர்வை மதித்திடாமல்
பொன்னுலகோர் தமிழ்சிதைத்தார் என்று சொல்ல,
அதைத்திருத்த வென்றேயோ எம்மைவிட்டே
அதிவேக மாய்ப்பறந்து சென்றுவிட்டீர்?

தமிழ்த்தாயின் தவமகனே தாழ்வு நோக்கம்
தாங்கியவர் எவரேனும் எதிர்ப்பதற்கே
இமைப்போதில் எழுச்சிகொளும் உணர்ச்சி வெள்ளம்
எங்குவிட்டுச் சென்றிரோ? இமையா நாட்டம்
அமைந்தவரே தமிழ்காக்க அமையும் என்றோ
அவ்வுலகம் தனையடைந்தீர்? அல்லாக் கால்இத்
தமிழகத்தின் நன்றியிலாத் தன்மை கண்டோ,
தமிழையுமே நீர்மறந்து பிரிந்துவிட்டீர்?

ஏறுபுகழ் இலக்குவனார்

புலவர்மணி
தி. கி. சுந்தரமூர்த்தி

தமிழ்நாட்டின் நல்வாழ்வே தன்வாழ்வாக் கொண்டோன்
தமிழ்மொழியின் உயர்வெல்லாம் தன்னுயர்வாக் கொண்டோன்
அமிழ்தாம்நம் இலக்கணமும் இலக்கியமும் அறிந்தோன்
அஞ்சாத கொள்கைநெறி நெஞ்சுரமும் அடைந்தோன்
இமிழ்கடல்சூழ் ஞாலத்தார் எவரெதிர்த்த போதும்
இன்னுரையால் அவருளமே எய்தியநல் லறிஞன்
கமழ்தமிழின் பேராசான் இலக்குவனார் கண்ட
கருத்தெல்லாம் தமிழுள்ள காலமெலாம் வாழும்.

செந்தமிழும் ஆங்கிலமும் செப்பமுறக் கற்ருேன்
திருக்குறளின் நெறியெங்கும் திகழஇதழ் கண்டோன்
மைந்துமிகு சங்கநூற் ருெகைவளமே துய்த்து
மாண்புறவே இலக்கியநற் றிங்களிதழ் கொண்டோன்
முந்துறுதொல் காப்பியத்தை ஆங்கிலத்தில் எழுதி
மூதறிஞர் பட்டமதை உள்ளபடி பெற்ருேன்
இந்தவகை தமிழுக்குப் பணிசெய்த தலைவன்
இலக்குவனார் ஏன்மறைந்தார்? எண்ணியதைப் பாரீர்!

எண்ணியதை முடிப்பதற்கு ஏற்றநெறி கண்டான்
இனியதமிழ் ஆக்கந்தான் என்னுக்கம் என்ருன்
மண்ணுலகில் மொழிக்காகத் தன்னுயிரை ஈந்து
மடிந்தாலும் போதுமது வாழ்விலக்கே யென்ருன்
கண்ணுன செந்தமிழைக் காப்பதற்குச் சிறையும்
கண்டதமிழ்த் தலைவரிலே கண்கண்ட தலைவன்
எண்ணமெலாம் தமிழ்வடிவம் இலக்குவனார் வடிவே,
எண்ணுமுன் ஏகினனே, எந்தமிழர் நாடே!

நாடுமொழி வாழ்வதற்கு நற்பணிகள் தேவை
நல்லனவே புரிதற்கு நல்லினமே தேவை;
தேடுபொருள் செல்வமெலாம் நிலையாமை யாகும்
செந்தமிழ்க்குச் செய்பணியே மெய்ப்பொருளே யாகும்;
வீடுமனை மக்களெலாம் உள்ளவரை உண்டு
மேன்மையுறு புகழ்தமிழ்க்குச் செய்பணியால் உண்டு;
ஏடுபுகழ் இலக்குவனார் நினைவதனைக் கொண்டு
இதயத்தில் தோன்றுகின்ற எழுச்சியதைக் காண்போம்.

எல்லாரும் பிறப்பதிலே புதுமை யில்லை
இயல்பாய குணங்களிலே மாற்ற மில்லை
சொல்லாரும் கலையாய்ந்த பின்னர் வாழ்க்கைத்
தூய்மையுடன் புகழ்மணமும் மணக்கக் கண்டோம்;
பல்லோரும் போற்றுமனப் பாங்கு தன்னைப்
பைந்தமிழர் இலக்குவனார் பண்பாய்ப் பெற்றார்
சொல்லாடிச் சோறுண்டு துயின்றா ரேனும்
தூயதமிழ் நெஞ்சத்தால் உயர்ந்தா ரிங்கே!

ஆயிரம்தான் கற்றாலும் அன்பு வேண்டும்
அரும்பணிகள் செய்தாலும் அமைதி வேண்டும்
வாயளவில் பலபேசி வம்பு வாழ்கை
வாழ்வாரால் உலகநலம் வளராதன்றே!
தாயனைய உரைவழங்கி தகுதி பேணித்
தாய்மொழியைக் காக்கின்ற கருத்தே கொண்ட
சேயனைய இலக்குவனார் நெஞ்சம் பூத்த
செந்தமிழர் வாழ்வொருநாள் சிறக்கு மன்றே!

காப்பியம் ஆய்ந்த காவலன்

(கவிஞர். ப. இராமலிங்கம்)

தனக்கென்றே வாழ்நாளைப் பேணாது
தமிழிற்கே வாழ்நாளைத் தானீந்தாய்!
உனக்கென்றே உலகினிலே ஒன்றில்லை
உயர்வான மொழிக்கென்றே தான்வாழ்ந்தாய்
கனகமணித் தொட்டிலினைக் கற்றிருப்பாய்
கண்ணயரக் கட்டிலினைப் பெற்றிருந்தாய்
இனமென்றே சொல்லிடிலோ உயிரைத்தான்
ஈந்திடவே முனைந்திட்ட கோமகனே!

முன்னவரே நாமென்று முழங்குதற்கு
மூதறிஞர் காப்பியனை ஆய்ந்தாய்நீ!
இன்னபிற தொண்டினையும் இயற்றித்தான்
"இலக்குவனர்" எனும்பெயருக் கிலக்கானாய்!
இன்னலினைத் தந்தார்க்கும் இனியனவே
ஈந்திட்ட எங்குலத்தின் தெய்வமகன்;
என்றுமுனைப் போற்றுதலே; தமிழர்வாழ்வு
ஏற்றமிகு வாழ்வென்று; இயம்புவோமே!

மொழிகாக்க முனைந்திட்ட முழுநிலவே
முத்தமிழின் நலன்காக்க முனைந்தகாட்சி;
விழிவிட்டு அகலாது ஆருயிரே!
வெஞ்சிறையில் வெந்திட்டாய் அம்மம்மா;
அழிக்கவந்த பேய்மொழியை அடித்துவிட்டு,
அரியணையில் தமிழ்மகனை ஏற்றிவிட்டு;
விழித்திருந்து பார்ப்பதற்கு விடவேயில்லை;
விழியற்ற காலத்தின் கோலமன்றோ!

தென்குன்றத் தென்றலிலே திளைத்துவிட்டாய்
தென்னவரின் வாழ்வினிலே நிலைத்துவிட்டாய்
மன்னவரின் உயிரான மாத்தமிழை
மன்னுலகில் மலர்ந்திடவே வித்துமிட்டாய்
உன்றனது "பழந்தமிழின்" வரலாற்றால்
உணர்ச்சிமிகு "குறள்நெறி"யை நீசமைத்தாய்
முன்னவரின் முத்தமிழின் முடிமணியே
மூவுலகில் உன்புகழும் முடிமணியே!

சலசலக்கும் அருவியெலாம் கடலிற்றான்
சந்திக்கும் என்றாலும்; இடையகத்தே
பலபலக்கும் வயற்காட்டைப் பயிராக்கும்
பான்மைதனைப் பெற்றவரே "பண்டாரகர்"
கலகலக்கும் சிரிப்பொலியைக் கேட்பதற்குக்
கார்மேகத் தொண்டனைக் காணுதற்கும்;
பலகாலம் உயிர்வாழ வேண்டிநின்றேன்
பாதியிலே முடிப்துவிட்டான் பாவிமகன்!

வள்ளுவனைக் கூப்பிட்டேன்; இலக்குவனார்
வந்துவிட்டார் என்னோடு என்றுசொன்னார்
தெள்ளுதமிழ் கம்பனையுங் கேட்டபோது,
தேடாதே என்னோடு இருக்கின்றார்
பள்ளுநடைப் பாட்டினிலே சொல்லிவிட்டான்!
பார்புகழும் இளங்கோவைக் கேட்டபோது,
உள்ளுணர்வால் என்னோடு உறைந்துவிட்டார்,
உலகிற்குச் சொல்லிவிடு என்றுசொன்னார்!

உனைக்காண ஓடிவந்தேன் ஆவலோடு
உடலைத்தான் மூடிவிட்டார் நன்காட்டில்
எனைக்காண நினைப்புத்தான் உனக்குண்டு
எனவேநீ திறப்பதற்கு ஆணையிட்டாய்!
உனைக்கண்டு உள்ளத்தை நானெடுத்து
உயர்வான நெஞ்சறையில் பூட்டிவைத்து
உனைக்காண நானொருநாள் உற்றபோது
உன்நெஞ்சை கொண்டுவரல் உறுதிதானே!

"இந்தி புயலென வந்தது. மலைஎனத்தடுத்து நிறுத்தியவர் தண்டமிழ்த் தலைவர்சி. இலக்குவனாரே, கல்லூரிப்பயிற்று மொழியானது தமிழாகஇலங்க வேண்டுமெனப் படைதிரட்டினார். சென்னைவரைப் பெருநடைப்பயணம் செல்ல இருந்தார். அக்காலத்து இருந்த பேராயக்கட்டு இலக்குவனாரைத் தளையிட்டு வழக்குத்தொடுத்தது"

–பேராசிரியர் வீ ப. கா. சொல்லழகன், மு.க.,

டாக்டர்.

சி. இலக்குவனார்

மறைவு

புலவர். திரு. சி. அரசப்பனார்
உறையூர், திருச்சிராப்பள்ளி.

*

வள்ளுவரின் வழிவந்தோய் !
வாழ்விற்கு வழிவகுத்தோய் !
உள்ளுவார் உள்ளத்தின்
உயர்பீடம் தமைஏற்றாய் !
தெள்ளுதமிழ் தனிஉயரத்
திறல்தொண்டு பலசெய்தோய் !
கள்ளமிலா நல்லுளத்தோய்
கன்னித்த மிழோடேவாழி !

முத்தமிழின் திறமறிந்து,
மூவேந்தர் பண்பறிந்து,
எத்திறத்தார் எவ்வினத்தார்
எத்தொழிலார் எனஇன்றிப்
புத்துணர்ச்சி மொழியுணர்ச்சி
இனஉணர்ச்சி மூட்டிவிட்டாய் !

சித்தம்சொல் செயல்ஒன்றாய்
திகழ்ந்தபெரு நல்லறிஞ!

உழைப்பிற்கு மதிப்பீந்தாய்!
உண்மைக்கு உயர்வளித்தாய்!
அழைப்பிற்கு மகிழ்வுற்றாய்
அன்பிற்கும் அறிவிற்கும்
தழைத்தபெரு சிந்தனைக்கும்
தாம்சான்றாய்க் குன்றானாய்!
பிழைப்பிற்குத் தமிழ்விற்கும்
பேதையரை இடித்துரைத்தாய்!

இருபதாண்டுப் பொழுதை
வறுமைக்குப் பலிஇட்டாய்!
இருபதாண்டுப் பொழுதை
புலமைக்குச் செலவிட்டாய்!
இருபதாண்டுப் பொழுதைப்
பிறர்உயரச் செலவிட்டாய்!
அறுபதாண் டுழைத்துழைத்து
அயர்வுற்றாய் போலிந்நாள்!

தமிழ்வாழ அறிவுயர,
தக்கார்கள் புகழ்ஓங்க,
தமிழ்ப்பண்பு பெரிதாக
தம்வாழ்வை அர்ப்பணித்தாய்!
இமிழ்க்கடல்சூழ் உலகெல்லாம்
இப்படியார் தினமுழைத்தார்?
தமிழ்முனிவர்; மறைமலையார்;
நாட்டாரை மிஞ்சியவர்!

இல்லறத்தார் புகழ்பெற்ருய் !
துறவறத்தார் வீடுற்ருய் !
நல்லறத்தார் வழிபெற்ருய் !
நாடுபுகழ் திறம்பெற்ருய் !
பல்லறத்தார் போற்றுமறம்
பார்போற்றப் புதுக்கினதால்,
வல்லறத்தார் வழிகாட்டி
எனப்போற்றும் சான்ருேய்நீ !

காலதேவன்

நாட்டாரை ; அண்ணவை ;
நாடுபுகழ் **சிதம்பரநாதன்** :
வேட்டாரும்புகழ் **இராசமாணிக்கம்** ;
வெறுப்பில்லா **ஐயன்பெருமாள்** ;
கூட்டோடு **அறுபத்தில்**
கொண்டுண்ட **எமதர்மன்**
பாட்டோடு நம்பாட்டை
நிறுத்திவிட்டோம் பாரேபாராய் !

பண்டாரகர்

சி. இலக்குவனர்

இரங்கற்பா

வித்துவான். சு. சுப்பையா

(எண்சீர் விருத்தம்)

1

இளசைக்கிழாரும் - இலக்குவனரும்

தலைப்பாகையோ சென்னிமிசை அரைக்கசைத்த கச்சையதோ
தார்பாய்ச்ச மேனியிலோ எந்நாளும் மாறாத
நிலையங்கி மீதொளிர தமிழாசான் எனும்வடிவில்
நகைப்பூட்ட நம்முன்னோர் நடைபோட்ட காலமுண்டு
இலக்கணமும் இலக்கியமும் கற்றாய்ந்து என்றுமுள
இயற்றமிழில், நாவலராய் இளசைக்கிழார் பாரதியோ
மலையெனவே ஆடையிலும் பாடையிலும் ஆங்கிலேய
மாந்தர்போல் நிமிர்ந்து நின்றார் மொழிக்காக
வித்திட்டார்

2

அகிலத்தில் தோன்றுகின்ற எவ்வுயிர்க்கும் மரபுண்டு ;
ஆய்வுமிகு டார்வின்சொல் கருத்திதுபோல் சிலம்பிசைத்த
தகைமைபெறு இளங்கோவடி மரபினராய் சாத்தனாரைத்
தொடர்பாக்கின் சிந்தாமணி தேவருக்கோ சேக்கிழாரே

தொகைமிகுநல் லடியார்கதை செப்பியசீர் உயர்மாண்பால்
தடம்பற்றும் தோழரெனக் கொண்டிடிலே
இளசைக்கிழார்

வகையில்வரு மாமணிதான் மீசைவளர் இலக்குவனு !
விருதைவீதி படபடக்க வருவாசான் நீயன்றே !!

3

இலக்குவனரின் தோற்றம்

பாண்டியன்போல் நெடுந்தோற்றம் முழுநீளக் கஞ்சுகமே
புலவர்மகன் நீயணிந்து வல்லவட்டு முன்திகழ
ஆண்டகையே! எள்ளிநகை புரிவிழிகள் ஆடியினுக்
கயலினதாய் அலைபாய அரிமாப்போல் நின்னடையைக்
காண்போமேல் தமிழ்பயிற்று தலைமகனே! தானைதனில்
கட்டளைகள் இயற்றுகின்ற தளபதியும் கீழாவான் ;
நீண்டதொரு கொள்கைக்கே உயிர்வாழ்ந்து சிறைசென்ற
நமதண்ணல் சிதம்பரரும் பாண்டித்துரை துணையோடு

4

குறள்நெறியின் சிறப்பு

இளசைக்கிழார் பாரதியும் தானிணைய தியாகியவர்
இயக்கியதோர் கப்பலாலே புகழ்பெற்றூர் வருவாயும்
வளங்குறைய ஐயகோ !பின் வறியரானூர் ஐயனே! நின்
வரலாறும் நோக்குவோமேல் வள்ளுவர்செய்
குறள்நெறியைக்
களங்கத்தைக் காசாக்கும் கசடர்முன் கடைவிரித்தாய்
களங்கத்தையே கண்டுமகிழ் அதைவாங்கா மாக்களாலே
பளிங்குபோன்ற உளமுடையோய்! கைப்பொருளை
இழந்துநீயும்
எளியனுனய் எனினுமுன்நற் ருளாற்றிய
தொண்டெண்ணினே

5

பூவுலகில் நாடோறும் மிகுதியாக மலர்கின்ற
எருக்கினது வாழ்வோடு குறித்ததொரு பருவத்தில்
காவதிலே குறைவாகப் பூக்கின்ற உரோசாவின்
கவினுமையோ! மணம்பரப்பி வாடிடினும் அதன்பினுமே
பூவொழிய அத்தரென மாறுகின்ற பயனறிவோம்
புலமைமிகு இலக்குவனு! குறள்நெறியின் மலரிதழ்ோ
சேவையாய இந்திமொழி சேடயமாய் இருந்தாலும்
சீர்தூக்கும் இலக்கியத்தால் துலாக்கோலாய்
இருந்ததன்றோ?

6

அச்சமிகு தமிழர் செயல்

சிந்திப்பதைச் சொல்லுதலும் எழுதுதலும் செந்தமிழர்
சிறப்பாகும் அவையிலேயேல் காப்பியங்கள் உருவாகா
நிந்தைமொழி தோன்றிடலாம் அன்றொருநாள் ஆடிவீதிப்
பந்தலிலே குறள்கற்ற மேலோர்க்கே மேடைதனைத்
தந்திடுதல் நன்றெனவே நீமொழிந்தாய் புலமைதனைத்
தூக்காது தமிழனையே தமிழனுமே பழிவாங்கும்
அந்தகர்கள் அதிகரிக்கும் காலமன்றோ? அதைக்கேட்டே
ஆடியோரும் அன்றுமுதல் உனையழைக்கா செயல் புரிந்தார்

7

இராமனின் இளவலும் இலக்குவனும்

தம்பியுளான் படைக்கஞ்சான் நம்பிக்கை நாயகனாய்த்
தான்திகழ்வான் எனும்கருத்தை கம்பர்தன் காவியத்தில்
செம்பொருளாய் நாம்கண்டோம் முன்கதையில் வனமதிலே
சீதைராமன் துயில்வார்க்கோ இரவெல்லாம் இமைக்காது

தம்பியனும் இலக்குவனே காவல்தொழில் தான்புரிவான்
அன்னவன்தன் பெயருடையோய்! தமிழ்ப்பகையைத் தடுத்திடவே

செம்மல்நீ தமிழ்க்காப்புக் கழகமதைத் தோற்றுவித்தாய்
சீற்றமிகு இந்தியால்பின் பாளைதனில் சிறைபுகுந்தாய்

8

செக்கிழுத்தச் செம்மலும் மொழிக்காத்த முதல்வரும்

உன்பெருமை யாரறிவார் நன்றிகெட்ட நாடிதுவோ
உள்ளிருந்து வருவுனேயே வரவேற்கத் துணியவில்லை

இன்றுதானே? அக்குறையும் நேர்ந்துளது விடுதலைப்போர்
இயக்கத்தில் ஈடுபட்ட செக்கிழுத்த செம்மலுக்கும்

அன்றையகோ! கோவையிலே நேர்ந்தந்தோ; சிவாவன்று
அரவணைக்கச் சிதம்பரரும் உளம்குளிர்ந்தார் மொழிப்போரில்

இன்னலையே இனிதேற்ற இலக்குவனு! பசுமலைவாழ்
சுந்தரனே அன்றுனேயும் வரவேற்க நீமகிழ்ந்தாய்

9

இலக்குவனரின் தனியியல்புகள்

ஆட்சிமாற்றம் விரும்புமன்பர் அறவழியிலதையடைய
அன்றூடச் சிக்கல்களில் பொதுமக்கள் தமையணுகி

வேட்டுமுறை விட்டொழித்து வேட்புமுறை தனை நாடி
வெற்றிபெறல் நன்றாகும்ரவேக அரசியலில்

நாட்டங்கொள் விருதையாசான் வேட்டுமுறைக் கருவிசெய்ய
மாட்டுமுன்ன ருடன்பணிசெய் வாய்மைமேலோய்!
காவலர்முன்
சாட்சியானுய் தொல்காப்பிய ஆய்வோடு குறள்நெறியும்
சிந்திப்போய் அன்னேன்தனை நன்மைசொல்லிக்
காத்தனையே

10

தமிழ்கற்ருேர் தலைமைத்தொழில் ஆசானுய் வரவெதிர்ப்பு
தூயவனே! இலக்குவனு! ஆண்டவரும் அயலரன்ருே
இமயமுதல் குமரிவரை ஆங்கிலத்தில் பயின்ருரையே
இளைஞர்பயில் கல்விக்கவர் தலைமையென மரமீந்தார்
இமிழ்கடல்நீர் தாண்டியவர் இங்கிலாந்தே அடைந்தாலும்
இங்குவாழும் அவர்தாசர் உளம்சிறிதும் மாறியிலர்
நமையீங்கு இரண்டாந்தர ஆசானுய்க் கொண்டுள்ளார்
தமிழாய்வுசெய் பண்டாரக! தகர்த்துநீயே முதல்வனுனுய்

11

பொதுவாழ்வில் புகுந்தபலர் சிறைப்பட்டும் சொத்திழந்தும்
பீடுமிகப் பெற்ருலும் அரசியலில் அதன்பெயரால்
பதவிதனைப் பெறுவதுவே அறவிலைசேர் வணிகமாகும்
பச்சிளம்தன் குழவிக்குப் பாலூட்டும் பெற்றதாயும்
நிதிநோக்கி வளர்ப்பதுண்டோ? தன்குழந்தை எண்றெண்ணி
நயந்தவளும் உடல்சோர்வாள் அதுபோன்றே
இலக்குவனே!
கதியிழக்க நேர்ந்தபோதும் தியாகத்தையே காசாக்கா
குணம்மிகுந்தாய் கலங்குகின்ருேம் உன்மரபு மினியிலையே!

...0...

தமிழ் மலை சாய்ந்ததே!

செஞ்சொற்பாவலர்
ப. சங்கரலிங்கம்

தமிழ்மலை சாய்ந்ததே !
தமிழ்க்கடல் வரண்டதே !
தமிழ்த்தலை உருண்டதே !
தமிழ்க்கலை அழிந்ததே !
தமிழுயிர் பிரிந்ததே !
தமிழ்ப்பயிர் தீய்ந்ததே !
தமிழ்ச்சுடர் அணைந்ததே !
தமிழ்நாடே இருண்டதே !

சிங்கம்போல் நிமிர்ந்தநடை !
செந்தமிழே சிந்தும்வாய் !
பொங்கிவரும் புதுநிலாப்போல்
பூரித்த தடந்தோட்கள் !
தங்கநல் தட்டினைப்போல்
தகதகக்கும் அருட்கண்கள் !
மங்காத தமிழ்போன்றே
மாசற்ற வாழ்வுடையோன் !

தமிழ்தமிழ் எனமுழங்கும்
தமிழ்முரசாம் இலக்குவனுர்
தமிழொன்றே நினைத்திடுவான்
தனைமறந்து வாழ்ந்திடுவான் !

தமிழர்தம் நல்வாழ்வே
தன்வாழ்வாய் எண்ணிடுவான் !
தமிழ்த்திரு நாட்டினையே
தன்வீடாய்ப் போற்றிடுவான் !

பொன்னித்தாய் திருமடியில்
புகழ்மறவன் நடைபயின்றான் !
தென்பொருநைத் தென்றலினைத்
தான்தழுவி வளர்ந்திடான் !
தன்பகைப் பெரும்பதியில்
தளிர்நிலவாய் எழில்பரப்பி
இன்றைய இளங்கோவாய்
இருந்திட்டான் ! தமிழ்வளர்த்தான் !

உள்ளத்தில் பட்டதனை
ஒழியாதே எடுத்துரைக்கும்
தென்னியநல் நக்கீரர் !
தெளிந்தநம் மறைமலையார் !
அள்ளியே தமிழுணர்வை
அருங்காப்புக் கழகத்தால்
வெள்ளம்போல் பாய்ச்சிட்ட
வண்டமிழ்க் காப்பாளன் !

சந்தியே சிரிக்குமிந்தி
கள்ளிபோல் முளைத்திடவே
முந்தியே களையெடுத்து
முத்தமிழ்ப் பயிர்வளர்க்க

பந்தெனவே பெருந்தலைமைப்
பதவிதனை உதைத்திட்டான் !
விந்தைமிக்கோன் ! செயல்வீரன் !
தவஞ்சிறையை விரும்பியேற்றான் !

கொள்கைக்கே வாழ்ந்திடுவான்
கொடும்வறுமை பலவேற்றான் !
பொல்லாங்கு கண்டிட்டால்
புழுதியாக்கும் களிருவான் !
தள்ளினோர் பலருண்டு !
தரைவில்லை ! உயர்ந்திட்டான் !
எள்ளினோர் பலருண்டே !
இளகவில்லை ! ஒளிபெற்றான் !

பண்டையக் காப்பியத்தைப்
பார்புகழும் ஆங்கிலத்தில்
இன்றையக் காப்பியனாய்
எழுதிட்டான் ! இறவாத
அன்னையாம் நம்தமிழில்
அழியாத இடம்பெற்றான் !
தென்னையாங் வாழ்ந்திட்டான் !
திருக்குறள்போல் மணம்பெற்றான் !

கன்னிநல் தமிழ்தன்னைக்
கடைந்தெடுத்து நாளெல்லாம்
நுண்மதியால் அணுஅணுவாய்
நுழைந்தறிந்து படம்வரையும்

பண்டையச் சித்திரனார் !
　　பார்புகழும் கம்பநாடார் !
எண்ணில்லா நூல்செய்த
　　இலக்கணப் பெருங்கடலே !

குறள்வழி நின்றிட்டு
　　'குறள்நெறி' கண்டிட்டோன் !
திறமிக்க புலமையினால்
　　திண்ணிய ஆய்வுரையால்
அருந்தமிழர் பெருவாழ்வை
　　அகமகிழ மிருந்துவைத்தே
இருநிலமே பவனிவந்த
　　இந்நாளின் இராசராசன் !

திருநகரின் ஒளிவிளக்கே !
　　தேன்பாய்ச்சும் மணிநாக்கே !
பெருமதுரைப் பாண்டியனே !
　　பிறழாத கபிலனே !
நறுமலரே ! இலக்குவரே !
　　நலமிக்க பெருமகனே !
திருநாடே சென்றாயோ?
　　தென்தமிழை வளர்த்திடவே !

பண்டாரகர்

சி. இலக்குவனார்

மறைவு பற்றி

இரங்கற்பதிகம்

ஞா. தேவநேயன்

1

முந்திவா ளோடு மூத்த முதுகுடிப் பிறந்து கல்வித்
தந்தையர் தமிழ்ப்பா லூட்டத் தறுகணர் புலமை முற்றி
இந்தியை யெதிர்க்கு முன்பே யேனைய மொழிக்க லப்பைச்
சிந்திய தமிழ்வளர்ப்புச் செயலிலக் குவனார்க் காணேம்

2

நீரணை திருவை யாற்று நேரிரு மொழிக்கல் லூரி
ஆரியர் முதல்வ ராகி யருந்தமிழ் பழித்த காலைச்
சீரிதின் மறுத்து வந்தார் செறிந்திலக் குவனார் தாமே
கூரியல் குன்றுமோதான் கோளரி குருளை யேனும்

3

ஆறடி வளர்ந்த நல்ல ஆண்மையர் தோற்றம் விஞ்சும்
மாறனோ ஆரனோ ஆரன் தானோ மற்றெனின் சேரர் கோனோ
வீறுடன் நீண்மே லாடை வீசுகை முழந்தாள் தோய
ஏறுபோல் நிமிர்ந்து செல்லும் இலக்குவனாரைக் காணேம்

4

உவப்பவவே தலைக்கூட்டிப்பின் உள்ளவே பிரியுமுன்னர்த்
தவப்பல நாளு மொக்கத் தனிச்சுவை விருந்தி னேம்பி
எவர்க்குமுன் அழுக்கா றின்றி இயல்திறம் புகழ்ந்து போற்றி
நிவப்புறும் புலவர் செய்கை நிகழிலக் குவனார்க் காணேம்

5

பகலெல்லாம் மாண வர்க்குப் பகுத்றி வுடன்கற் பித்து
மிகலுள வொழிவு நேரம் மிளிர் 'குறள் நெறி'ந டாத்தித்
தகுமொரு கைம்மா றின்றித் தமிழ்வளர் கழகம் நாட்டித்
திகழ்வுறு தமிழ்த்தொண் டிற்குத் திணையுமோர்
பாராட்டுண்டோ?

6

செந்தமிழ்ப் புலவ னென்கோ சிறந்தவா சிரிய னென்கோ
செந்திற ஆய்வோ னென்கோ செழுந்தமிழ் காத்தோ
னென்கோ
இந்தியை யெதிர்த்து வேலை யிழந்துசெல் சிறை னென்கோ
முந்துதொல் காப்பி யத்தை மொழிபெயர்த் தீந்தோ
னென்கோ

7

பல்கலைக் கழக வாட்சிப் பதவியின் தகுதி யெல்லாம்
மல்கிய புலவ ரேனும் மதுரையில் ஏமாறுண்டார்
புல்கியோர் 'வாய்மை' யேட்டுப் புரவல ராகாமையின்
ஒல்கியே வுள்ளம் விண்டார் ஒய்ந்திலக் குவனார் சென்றார்

8

எந்தையை யிழந்தே மென்பர் இன்னுயி ரிழந்தே மென்பர்
முந்தையை யிழந்தே மென்பர் முறைபிற சொல்வர் யாமோ
இந்தியை யெதிர்த்து வீழ்த்தி யிருந்தமிழ் மீட்டுக் காக்கும்
செந்தமிழ்ப் படையின்மானச் செம்மலை யிழந்தே மென்பேம்

9

தன்னல மொன்று மின்றித் தமிழ்க்கென வாழ்க்கை யேற்ற
மன்னலப் புலவர் தேரின் மருவுபண் டாரகர் தான்
இந்நிலை யொருவ ருண்டோ இலக்குவ னுரை யொப்பார்
இன்னலே தமிழ்க்குநேரின் இன்னுடல் ஈய வல்லார்

10

இருந்தநா ளொன்றுமீயா திறந்தபின் னிரங்கல் கூறல்
வருந்தவே தானிந் நாட்டு வழக்கமாய்ப் போயிற்றந்தோ
திருந்திய வுண்மை யன்பர் தீர்ந்தவர் குடும்பத்திற்குப்
பெருந்தொகை தண்டி யீக பெரிதொரு கழுவா யாகுல்.

*

'அவன் ஒருவன் உளான் எனின்' எனும் சங்கத் தமிழ்நெறி முறைப்படி இலக்குவர் உளார் எனின் தமிழ்ப்பகை சரியும், தமிழ்க்கேடு உடையும், மொழிக் கொலை அழியும், தாய்மொழி பழிப்பு ஒழியும், மொழிக்காப்பு மணக்கும், தனித்தமிழ் உணர்வு வீறு கொண்டெழும், எழுச்சிமிகு புரட்சியுணர்வு புலரும், மலரும்."

பேராசிரியர். வீ. முத்துச்சாமி, மு. க.

என்று காண்போம்

பேராசிரியர்

ஏ. ஆர். பொன்னையா, எம்.ஏ., பி.எல்.,

முத்தமிழை முறையாகக் கற்ற வேந்தே!
மூவேந்தர் வழிவந்த தென்னர் கோவே!
சத்தான தமிழ்மொழியின் ஏற்ற மெல்லாம்
சரியான வழியினிலே பரப்ப எண்ணிச்
செத்தாலும் தமிழுக்கே சாவ தாகச்
செகமுழுதும் பறைசாற்றி வந்தீர் ஐயா!
சொத்தாலும் பொருளாலும் எளிய ராணீர்
சொகுசான வாழ்வதனை வெறுத்துவிட்டீர்!

மறைமலையார் வழியினிலே தமிழைக் காத்தீர்
மாண்புறு தொல் காப்பியத்தை ஆங்கிலத்தில்
முறையோடு மொழியாக்கம் செய்தீர் ஐயா!
முந்துபுகழ் உமைவந்தே அடையுமுன்பே
கறைபடிந்த காலன்தான் கவர்ந்து சென்றான்
கண்ணீரால் கரைந்தே தான் வாடுகின்றோம்
அறைகூவல் விடுப்பீரே தமிழ்ப் பகைக்கே
அச்செயலை இனியாரே செய்ய வல்லார்?

இந்திப்போர் நடக்கையிலே தலைமை தாங்கி
எண்ணற்ற மாணவர்க்கு வழியைக் காட்டிச்
சிந்திப்போர் அனைவரையும் தமிழைக் காக்கச்
சிந்திடுக குருதியென அழைத்து நின்றீர்

நிந்திப்போர் கூற்றெதற்கும் கவலையின்றி
நெடும்புவியில் குறள் நெறியில் நடந்து சென்றீர்
சந்திப்போர் எவரிடமும் தமிழின் மேன்மை
சரியாக உமைப்போல எவரே சொல்வார்?

குறளுக்கும் உரைகண்டீர் பெருமை கொண்டோம்
குறுநோக்கில் சிலரும்மைச் சாடக் கூடும்
திறல் கொண்ட இலக்குவனார் ஐயா! உம்மைத்
திரும்பவும் நாம் மேடையிலே என்று காண்போம்?
அறங்கொண்ட நெஞ்சுடனே உம்மைப் போல
அவனியிலே இனியாரே வாழக் கூடும்?
புறங்கண்ட பகைவரெலாம் ஓடிப்போனார்
பொறுக்காத கூற்றுவனே கவர்ந்து சென்றான்?

*

" இன்றைய தமிழக அரசு அமைவதற்குப் பல ஆண்டுகட்கு முன்னரே அமையப் போகின்றது என்று கண்டு ஆளும் பொறுப்புக்களும் இன்னின்னருக்கு இவ்வாறிருக்க வேண்டுமென வகுத்தெழுதிக் காட்டியவர் நம் பேராசிரியர் இலக்குவனாரவர்கள்"

ந. இராமநாதன், பி. ஓ. எல்.

தமிழ்நெஞ்சம் குடிபுகுந்த

அறிஞர் கோமான்

புத்தனேரி, *ரா. வேங்கடாசலம்*

முத்தமிழின் தூய்மையிலே உறுதி கொண்டோன்
முறையாகத் தமிழ்வளர்த்த அறிஞர் கோமான்
எத்திக்கும் தமிழ்மணக்க எண்ணங்கொண்டோன்
எதிர்த்தவரைச் செயலற்று மயங்கச் செய்து
சித்தமது தெளிந்திடவே செய்யும் தீரன்
செயலற்றுப் போனநிலை கொடுமை யன்றோ?
உத்தமனும் இலக்குவனர் உடலை விட்டார்
உலகத்தார் நெஞ்சிலெலாம் வீடு கொண்டார்
வித்தகராம் அன்னாரின் திறமை தன்னை
வியந்திட்டோம் ஏற்றபடி பயன்படுத்த
சித்தமது நம்மார்க்கு எழுந்ததில்லை
தேனெழுகப் பேசுவதில் என்னபயன்?
செத்துவிட்டார் பேரறிஞர் ; வழக்கம்போல

சேர்ந்துபுகழ் பாடிடவே மறக்கமாட்டோம்!
முத்தமிழைக் காத்திடவே மாண்ட வீரர்
முறையாகத் "தமிழ்க்காப்புக் கழகம்" கண்டார்
அத்தீரர் கண்டிட்ட கழகம் தன்னை
அணையாமல் வளர்த்திட்டால் தமிழ் நிலைக்கும்
புத்தீசல் போல வளர் எடுத்தாளர்கள்
புதைகுழியில் தமிழ் தன்னைப் போட்டுமூட
வித்திடவே முயன்றுவரும் இந்த நாளில்
விளையாட்டாய் இருந்திட்டால் வினையே சூழும்
புத்தியுள்ள தமிழர்கள் புரிந்து கொண்டு
புத்துணர்வு பெற்றெழுந்து சேர்ந்து ஒன்றாய்
சத்தான முத்தமிழைக் காப்போம் வாரீர்
சான்றோனும் இலக்குவனார் சென்ற பாதை!
எத்திக்கும் அன்னாரின் புகழ் மணக்க
இதைவிடவே வேறுவழி இல்லை சொல்வேன்.

"கால்டுவெல் தொல்காப்பியம் உணர்ந்திருப்பாரானால் இன்றைய தமிழியக்கம் ஒரு நூற்றாண்டுக்கு முன்னரே உலக இயக்கமாக உருவெடுத்திருக்கும். தொல்காப்பியம் ஆங்கிலத் தேர் ஏறி உலாவரப் பேராசிரியர் இலக்குவனார் வரவேண்டியிருந்தது. அவர் அதை மொழி பெயர்த்தார். அதன் வழியாகத் தமிழியக்கத்தை அவர் உலக இயக்கமாக மாற்றினார் எனல் வேண்டும்.

டாக்டர். தி. முருகரத்தினம்

மறவனே !
என்றும் மறவோம் !

புலவர்
தொல்காப்பியன

1 இலக்கணம் கற்றனை; இலக்கியம் கற்றனை;
இலக்குவன் என்ற பெயரோய் !
தலைக்கனம் அற்றனை; தமிழ்க்கனம் பெற்றனை;
தகுதியில் நின்ற பெரியோய் !
நிலைத்தமிழ் காத்திட நெடும்படை ஒன்றினை
நிறுவிடுந் தொண்டில் முனைந்தே
மலைக்கவும் வைத்தனை; மதிக்கவும் வைத்தனை
மணித்தமிழ் மக்கள் தமையே !

2 அறநெறி போக்கிய அழிநெறி மாக்களும்
அமைதியின் வாழ்வு பெறவே
குறள்நெறி காட்டினை; குறைநெறி ஓட்டினை
"குறள்நெறி" ஏட்டின் வழியே !
பிறநெறி மாந்தரும் பிழையற ஆங்கிலப்
பெருநெறி தன்னின் வழியே
முறைநெறி தேர்ந்திட முழங்குதொல் காப்பிய
மொழிபெயர்ப் புன்றன் பணியே !

3 அடிப்படை அற்றவர், அவசரப் பட்டவர்
அனைவரும் வாழ்க்கை யதிலே,
படிப்படி யாயுயர் பதந்தனைத் தள்ளியே
பலபடி தாண்ட முனைவார் !

படிப்பினை நம்பியும், பணியினை நம்பியும்
பதறுதல் இன்றி முனைந்தே
படிப்படி யாயுயர் பதவிகள் பெற்றுமே
பயன்தரும் பாடம் அளித்தாய்!

4 உயர்நெடுந் தோற்றமோ, ஒளியுமிழ் நோக்கமோ,
உளங்கவர் பாச மனமோ,
துயர்வரும் போதிலும், துவளுதல் இன்றெனத்
துலங்கிடும் மீசை முகமோ,
பயில்மனத் தூய்மையோ, பணிவுள வாய்மையோ,
பணியாது நின்ற முடியோ,
துயின்றன என்பபொய், தொடர்ந்துளத் தோவியத்
தொகையாகி நின்ற அவையே!

5 பொருளிலை என்பது புலவர்கள் வாழ்வினில்
பொதுவென நின்ற நிலையே!
அருளிலை, அன்பிலை, அழிவலை, நற்பெயர்
அதுவிலை என்ற நிலைதான்
இருள்நிலை ஆகிடும், இருள்நிலை வாழ்வில் நீ
இருந்திட வில்லை! எமக்கோ
மருள்நிலை தந்துமே மடிந்தனை! செந்தமிழ்
மறவனே! என்றும் மறவோம்!

பேராசிரியர். டாக்டர்.

சி. இலக்குவனர் அவர்கள்

மறைவு குறித்துப் பாடிய

இரங்கற் பாக்கள்

புலவர்

*

கு. மா. திருநாவுக்கரசு, B. A.,

1. தமிழ்த்தாயின் தவநெறியால் தமிழுலகில் தோன்றித்
தகைசான்ற புலமையினல் வாழ்ந்திட்ட பெரியோய்!
தமிழுலக மெங்கணுமே குறள்நெறியைப் பரப்பத்
தளராமல் உழைத்திட்ட தகவுடைநற் சான்ருேய்!
தமிழகத்தில் துறைதோறும் தமிழுக்கே முதன்மை
தடையின்றித் தரவேண்டும் எனமுழக்க மிட்டாய்!
தமிழ்மொழியைக் குறைகூறும் தகவிலரைக் கண்டால்
தயங்காமல் இடித்துரைக்கும் ஆசானய் வாழ்ந்தாய்!

2. "எல்லாம் தமிழே!" என்றுரைத்த
இலக்குவ ஞர் எனும் பெயருடையோய்!
தொல்காப் பியமாம் பெருநூலின்
தொன்னெறி உலகம் கண்டிடவே

பல்காப் பியமும் பயின்ருய் நீ
பாங்காய் மொழிபெயர்த் துரைத்திட்டாய்!
ஒல்காப் புலமை யுடையாய் நீ
உன்திறம் முற்றும் உரைப்பார் யார்?

3 இந்தியை நாளும் எதிர்த்தாய் நீ!
இன்முகங் கொண்டே சிறைசென்ருய்!
அந்திய காலம் வரை நீயே
அன்னிய மொழிக்கிங் கிடமில்லே;
எந்தமிழ் மொழியே உலகாள
ஏற்றிட வேண்டும் எனவுரைத்தாய்!
செந்தமிழ் மொழிக்குக் காவலனுய்ச்
சிறப்புடன் வாழ்ந்து சென்ருயே!

4. இன்றெமைப் பிரிந்தே சென்றிட்டாய்!
ஏங்கித் தவிக்கும் நிலேயளித்தே!
கன்றை யிழந்த தாயினேப்போல்
கதறிக் கதறி அழுகின்ருேம்.
என்றினி உன்னே யாங்காண்போம்?
எங்கள் துயரை எடுத்துரைக்க
இன்றிவ் வுலகில் மொழியுண்டோ!
என்றும் நின்சீர் நிலேத்திடுக!

*

தமிழ்ப் பேரறிஞர் டாக்டர்

சி. இலக்குவனார்

பிரிவாற்றுமை குறித்துப் பாடியது

இரங்கற்பாக்கள்

அன்பு கருணையானந்தம்

மணித்தமிழ் நாடுடையீர்! மறத்தமிழர் மாமன்னன்
பணிக்குத் தலைமகனைப் பகைவர்க்குக் கோடரியை
அணிக்குத் தளபதியை அண்ணல் இலக்குவனை
மணிக்கு மணித்தமிழின் மாண்புகனி மனத்தானை

குறள்நெறி காத்திடற்குக் குழுவினைக் கூட்டியுடன்
அறங்காக்கத் புதினத்தாள் அறிவுபெறத் தந்தவனை
துறவறத்தார் கொண்டாடுந் தூயநல் வாய்மையனை
மறவோம் நாம் டாக்டர்கலை மன்னவனை யாமறவோம்

எத்துணையோ தமிழ்நூல்கள் இயற்றித் தனித்தமிழின்
வித்தகத்தை மேலோரும் வியந்துமிகப் போற்றிடச்செய்
அத்தகைய பெரியானை அன்பருளம் அமர்ந்தானை
செத்தவரில் ஒருவனெனச் செப்பாரே தெளிந்தோரே

இந்திப்போ ராட்டத்தில் ஏறெனவே தானிமிர்ந்து
வந்தபோர் வீரரிலே வழிகாட்டிச் சென்றவனை
இந்தத் தமிழகத்தில் எத்தனைபேர் இருந்தாலும்
அந்தத் தமிழ்மகன்போல் ஆரினித்தான் வருவாரே

பல் காப்பியர்களுமே பாராட்டும் பைந்தமிழாம்
தொல்காப்பிய நூலைத் துருவி யாராய்ந்தவனை
வல்லாளன் இலக்குவனை வையகமே வுள்ளளவும்
நல்லானைத் தளபதியை நாட்டாரும் மறவோமே.

நன்றியினைச் செலுத்துவோம் நாம்

(புலவர். கு. மதுரகவி இராமானுசம், பழனி)

1) சங்கத்துப் புலவர்போல் சான்றாண்மை, வீரத்தால்
பொங்கியெழும் கதிரொளிபோல் விளங்கினார், புகழ்மிக்க
இங்குள்ள தமிழகத்துப் புலவர்குழு அணியினிலே
மங்கலமாய்த் திகழ்ந்திட்டார் மதிநிறைந்த
இலக்குவனார்

2) உழைப்பாலே பலபட்டம் பெற்றுயர்ந்தார்,
தொண்டினிலே
இளைப்பாறி இருந்திடார், எந்நாளும் தமிழ்ஏற்றம்
விழைந்திடுவார் பெற்றிடவே, அவர்திறத்து
வீண்தருக்குத்
தழைக்காது, தமிழ்மானம் தழைத்திடவே பணிபுரிந்தார்.

3) என்னருமைத் தமிழ்த்தாயின் திருமகனும்,
எழில்விளங்கும்
பன்னருநற் றமிழ்மறவர், தமிழறிஞர், பாரின்கண்
இன்னல்பல வந்துற்றும் எதிர்த்துநின்று தமிழ்வாழத்
திண்ணமுடன் வாழ்ந்துவந்த பேராசான் இலக்குவனார்.

4) புகழ்வேண்டார், பொலிவுதரும் போகவாழ்வு
விழையமாட்டார்
கேழ்வரினும் தமிழுக்காக இன்னுயிரும் ஈந்துநின்றார்

துகளாகப் பகைகடிந்து துலங்கிட்டார், துயர்பாரார்
புகழோங்கப் புலவரெலாம் பொன்வாழ்வு
பெறநினைந்தார்.

5) தமிழர்நலம் சிறந்திடவே தன்னலத்தைத் துறந்திட்டார்
தமிழர்புகழ் தரணியெலாம் விளங்கிடவே விரும்பி
நின்றார்
தமிழர்களின் வாழ்வின் இலக் கணமாம்தொல்
காப்பியத்தின்
தமிழ்த்தொன்மை உலகறிய ஆங்கிலத்தில்
வரைந்திட்டார்.

6) களங்கமிலா உளமுடையார், சுருதியதை உரைத்திடுவார்
வளங்காணத் துடித்திடுவார் வண்டமிழ்க்கு, வறிதாக
உளமின்றித் தமிழ்மாண்பு பேசுகின்ற போலிகளை
விளம்பிடுவார் மக்களிடம், சற்றேனும் அஞ்சாரே.

7) எங்களது வாழ்வுதமிழ் வாழ்வேயாம் என்றிருந்தார்
மங்காத தமிழ்மாண்பை மாநிலத்தோர் மனங்கொள்ளச்
சங்கொலிபோல் முழங்கிடுவார் சலிப்படையார்,
சான்றோர்க்குத்
துங்கமிகு பொன்னவார். மாற்றார்க்குப் புலியானார்.

8) சிங்கமென வாழ்ந்திட்டார் சிறப்புறும்நம் இலக்குவனார்
பங்கமிலாத் தமிழ்ப்பெரியார், பகுத்தறிவு வாதியவர்
தங்குபுகழ் ஆட்சிமொழி தமிழாக வேண்டுமென்றார்
பொங்கிவரும் தமிழுணர்வுப் புலவரவர் பொய்யில்லார்.

9) முன்பொருநாள் மாமதுரைத் தமிழ்ச்சங்கக் கட்டிடத்தில்
அன்புளம்சேர் பெரும்புலவர் இலக்குவனார்
அறைந்திட்டார்.

"இன்பமிகும், ஏற்றமிகும், எழில்மிகும்நம் தமிழென்றும்,
தொன்மையதாம் தமிழென்றும் பேசுவதால் பயனில்லை.

10) தமிழுக்குப் பல்கலைசேர் கழகம்தான் வேண்டுமென்றார்
தமிழுணர்வு கொண்டவரே துணைவேந்தர் ஆவதுவும்
தமிழ்ப்புலவர் தகுதியினைப் பட்டமதாய் ஆக்குவதும்
தமிழுக்குச் சிறப்பளிக்கும் செயலாகும்" என்றுரைத்தார்

11) பேராசான் 'இலக்குவனார்' இலட்சியத்தை எல்லோரும்
சீராக மேற்கொண்டு செயல்படுவோம் எஞ்ஞான்றும்
ஏரான அன்னார்வர்தம் ஆன்மாதாம் அமைதியுறும்
பேரன்பால் போற்றிமிக நன்றியினைச்
செலுத்துவோம்நாம்.

12) இலக்குவனார் பெரும்பிரிவால் தமிழறிந்தோர்
நெஞ்சங்கள்
கலங்கிமிகக் கையாறு கொண்டிடினும், அவர்பணியில்
உளங்கொண்டு சூளுரைத்துத் தொடர்ந்திடுவோம்
எல்லோரும்
களங்கமிலா அவரான்மா அமைதியுற வாழ்த்திடுவோம்.

...★...

"தோன்றிற் புகழொடு தோன்றுக, எனும் மறை மொழிக்கு, மாறுத, மறையாத காட்டாக நின்றிலங்கி, வசையொழிந்து கொழிக்கும், பெருவாழ்வு வாழ்ந்த பெரியவர் எனும் பெயரை வரலாற்றில் பொறித்துச் சென்றவர் நம் பேராசிரியர் இலக்குவனார்."

பேராசிரியர். வீ. முத்துச்சாமி, மு. க.

முத்தமிழ்ச் சிங்கம், பைந்தமிழ்க் காவலர்,
இலக்கண வித்தகர், பேராசிரியர், பண்டாரகர்

இலக்குவனார் அவர்களுக்கு

நா. க. மாணிக்கம்

அஞ்சலி

வெண்பா

சீரார் பசுங்கிளியே செந்தழல்வாய் வீழ்ந்தனையோ
நேரார் தலைவணக்கும் நேரிலாய் — ஏரார்ந்த
செந்தமிழை ஏலாத சேணுலகத் தார்க்குணர்த்த
அந்தரமோ சென்றாய் அகன்று.

ஆசிரியப்பா

முத்தமிழ் முழங்கும் இத்தரை மீதினில்,
முத்திரைப் பசும்பொன் ஒத்திடும் வான்புகழ்
திருக்குறள் நெறியைத் திக்கெலாம் பரப்ப
இலக்கு வைத்தனை, எழிலார் இலக்குவ!
விலக்கல் ஆகா வினைக்குள் ஆழ்ந்தே,
கலக்குந் தன்னைத் தந்தனை இன்றே.
தண்டமிழ்ச் சோலை சார்ந்த குயிலே!

அண்டர்கோன் தந்த அழைப்பினை ஏற்றாய்?
தொல்காப் பியத்தைத் தொலைவினர் உணர
ஒல்கா மொழியாம் ஆங்கிலத் தெழுதி
மன்னு புகழ்கொள் மாண்புடைச் செல்வ
வாழிய நீவிர் வண்டமிழ் தன்னில்.
இன்றெனை வியந்து இன்மொழி கூறுவார்
அன்றெனை மறந்தார் என்றுதான் கூறுவை
வாழத் தெரிந்தும் வணங்கத் தெரியா
வழிதான் தந்தன சரிவுகள் என்பார் ;
ஆயினும் என்ன? தங்கம் தங்கமே.
ஈரோட் டவையினில் நீயோர் அங்கம்
அண்ணா பார்வையில் நீயோர் வீரன்
கலைஞர் தமக்கோ கணக்கா யனும்நீ.
இத்துணைப் பெருமைகள் யார்க்கிவை வாய்க்கும்
ஓய்விலா துழைத்த உயர்பெரும் அறிஞ !
தாழ்விலாத் தமிழர்தம் நெஞ்சினில்
ஓங்குக என்றும் ஒளிர்க நன்றே !

...

என்றும் வாழ்வான்...

கு. செ. இராமசாமி, எம். ஏ.,

1

கூற்றுவனே, இரக்கமிலாக் கொடியவனே,
மெதுதமிழ்க் கோமான் மீது
சீற்றமென்ன கொண்டாயோ? தீமையென்ன
கண்டாயோ? திருநா டெங்கும்
சோற்றினுக்கே உயிர்வளர்க்கும் சுமடரெல்லாம்
வாழ்ந்திருக்கத் தொண்டும் அன்பும்
வீற்றிருந்த மளத்தாள்மேல், விழைதக்க
குணத்தான்மேல் மேவி னாயே!

2

தோற்றத்தில் நெடுஞ்செழியன்; சொல்திறத்தில்
கரிகாலன்; சூழ வந்த
மாற்றலர்கள் யாரெனிலும் மடங்காமல்
எதிர்நின்று வாகை சூடும்
ஆற்றலிலே சேரன்செங் குட்டுவன்; செந்
தமிழ்ப்பணியில் அதிகன் என்றே
நாற்றிசையும் கொண்டாடும் நற்றமிழ்ப்
பேரரசை நாடி னாயே!

3

நெஞ்சத்தில் தமிழிருக்கும்; நினைவினில்செந்
தமிழ்நலமே நிரம்பி நிற்கும்;
மஞ்சத்தில் துயில்கையிலும் வண்டமிழர்
துயர்நினைந்து மனம்து டிக்கும்;

கொஞ்சத்தில் எவருக்கும் வளையாத
கொள்கையுரம் கொண்ட ஆசான்
வஞ்சத்தால் அல்லாது கூற்றுவனே
உன்னிடத்தும் வளைவ துண்டோ ?

4

மாற்றலருக் கஞ்சாமல், மடியேந்திக்
கெஞ்சாமல், வண்ட மிழ்த்தாய்
ஏற்றமுறத் தன்வாழ்வில் இறக்கங்கள்
கண்டவனே, எக்கா லத்தும்
தூற்றுபவர் தூற்றல்மழைத் தூறலெனத்
துடைத்துவிட்டுத் தோள்கள் விம்ம
மேற்கொண்ட பணிமுடிக்கும் வித்தகனே
இனிஎங்கே விழிகள் காணும்?

5

வாயாரத் தமிழ்த்தாயை வாழ்த்தியநா
அடங்குவதோ? மற்றும் மற்றும்
சாயாத உரத்தோடு எழுதியகை
சாய்வதுவோ? தயங்கி டாது
போயார்க்கும் உதவநடை புரிந்ததிருக்
கால்மண்ணில் புதைவ துண்டோ?
ஓயாமல் தமிழுக்காய் உழைத்தவனும்
இவ்வாறு ஒழிதல் நன்றோ?

6

ஐயாற்றுக் கல்லூரி மாணவராய்த்
தமிழ்பயின்ற அந்நா ளும்,வை
கையாற்றுத் தியாகேசர் கல்லூரிப்
பணிபுரிந்த காலத் தும்,நன்

செய்யாற்று நீர்போலச் சேர்ந்தார்க்குப்
பயனளித்தே தேசத் தாரைப்
பொய்யாற்றுப் படுத்தாமல், புகழாற்றுப்
படுத்தியவன் போன தெங்கே?

7

தமிழுக்குப் பகையானோர் தன்பகைவர்;
தமிழ்நண்பர் தனக்கும் நண்பர்.
தமிழுக்கு வரும்இழிவு தன்இழிவு;
தமிழ்வெற்றி தனக்கு வெற்றி.
தமிழுக்கே தன்வாழ்வு, தனதுவளம் —
எனவாழ்ந்த தகுதி யாளன்
தமிழ்வேறு தான்வேறாய் ஆவானோ?
அவன்புகழும் தணலில் போமோ?

8

அறையிருந்து கட்டுரைகள் அன்றாடம்
பலர்படைப்பார்; ஆர்வத் தோடு
குறையிருந்த உரைதிருத்திப் பதிப்பிப்பார்;
கவிதைகளும் குவித்துத் தீர்ப்பார்;
கறையிருந்த நெஞ்சோடு தமிழ்பழித்த
கூட்டத்தைக் கடிந்து பேசிச்
சிறையிருந்த தார்? அந்தத் திருமகனை
இழந்தநமைத் தேற்று வார்யார்?

9

கீரனுக்குப் பின்புமொழிக் கேடுசெய்வார்
யாரெனினும் கிளர்ந்து தாக்கும்
வீரன்எவன் இந்நாட்டில் வெளிப்பட்டான்?
இலக்குவனும் மேலோன் மட்டும்

சோரவரும் நாட்களிலே துடித்தெழுந்து
நின்றிலனேல் தூள்தூ ளாகித்
தீருமன்றோ தமிழ்நலம்,அச் செம்மலைநாம்
இழந்ததுயர் தீர்ப்ப வர்யார்?

10

பன்னிரண்டு உயிராலும் பாரண்டு
கனித்தியங்கும் பசுந்த மிழ்தான்
மன்னுலகில் உள்ளவரை மன்னனவன்
பெயரிருக்கும்! வருங்கா லத்தில்
அன்னைமொழி துறைதோறும் ஆயிரமா
யிரம்வெற்றி அடைந்த பின்னும்
தன்னலமொன் றில்லாதான் தாள்வணங்கித்
தான்நமது சரிதம் செல்லும்

11

அதிகாரம் மூன்றிலே அமைந்திடும்தொல்
காப்பியமும், ஆன்ற சங்க
நிதியாக நாம்பெற்ற மேற்கணக்கும்
கீழ்க்கணக்கும் நிலத்தின் மீது
பதிவாகி வாழும்வரை இலக்குவனர்
திருப்புகழும் பாரில் வாழும்!
சிதையாமல் தேயாமல் மொழியுணர்ச்சி
தனைக்காக்கும்! தீரம் சேர்க்கும்!

12

மடியேந்தி மற்றவர்பால் வரிசைஎதிர்
பார்ப்பதுவே வழக்காய்க் கொண்டு
அடியேந்தும் நிலைவரினும் தயங்காத
புலவர்களை அணைத்துத் தாங்கிக்
கொடியேந்திப் போராடும் கொள்கையுரம்
ஏற்றியவன், குறள்நெ றிக்கே
இடியேந்து குரலாலே இளைஞர்களை
ஊக்கியவன் என்றும் வாழ்வான்!

...0...

குறள்நெறியால் முரசொலித்து
குவலயமெல்லாம் குளிர்தமிழ் விளங்கச்செய்த
புதுமை வேந்தன்
இலக்குமச் செம்மல் மறைவு தறித்து
தமிழ்ப் பெருஞ் சான்றோர்களது

இரங்கற் செய்திகள்

டாக்டர்.

சி. இலக்குவனர்

டாக்டர். வ. சுப. மாணிக்கம்
தமிழ்ப் பேராசிரியர்,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

டாக்டர் சி. இலக்குவனர் தமிழ்க்காப்பினை வாழ்க்கையின் இலக்காகக் கொண்டவர். பொருளையோ பதவியையோ புகழையோ பாராது தமிழ் நலத்தையே பார்த்தவர். யார்முன்னும் அஞ்சாது தமிழ் பற்றிய கருத்துக்களை மேடை மீது பொழிந்த தமிழ் முகில். தொல்காப்பியத்தையும், திருக்குறளையும் இரு கண்களாகக் கண்டவர். தமிழுக்காகத் துன்பத்தில் வளர்ந்து, துன்பத்தையே தாங்கித் துன்பத்திலே கண்ணயர்ந்தவர். இந்தியை எதிர்த்துச் சிறைபுக்க ஒரு தமிழ்ப் புலவர். தமிழுக்கெனத் தோன்றிய அரிய பிறவிகளில் இலக்குவனாரும் ஒருவர். அவர்தம் தமிழ்ப்பற்றும் தமிழ் வீரமும் தமிழ் நெஞ்சமும் நம் வணக்கத்துக்கு உரியவை.

பேராசிரியர் இலக்குவனர்

புலவர், ந. இராமநாதன், பி. ஓ. எல்.,
முதல்வர்,
இராமசாமி தமிழ்க் கல்லூரி,
காரைக்குடி.

பேராசிரியர் இலக்குவனர் இந்நூற்றாண்டில் குறிப்பிடத் தகுந்த பெரும்புலவராவார். இவர், தமிழ்ப் புலவரிற் பலர் ஆங்கிலம், கணிதம் முதலிய இக்காலக் கலைகளைப் பயிலாத காலத்தில் இவைகளைப் பயின்றபிறகு தமிழ் கற்க வந்தவர். இவர் திருவையாற்று அரசர் கல்லூரியில் தமிழ் கற்றார். அப்போது பெரும் புலவராக விளங்கிய பண்டிதர் எல். உலக நாதபிள்ளை, கரந்தைக் கவியரசர் ஆர். வேங்கடாசலம் பிள்ளை போன்ற பெருமக்கள்பால் தமிழ் இலக்கண இலக்கிய நூற்களை முறையாகப் பாடங்கேட்கும் வாய்ப்பினைப் பெற்றவர். பண்டிதர் எல். உலகநாதபிள்ளையவர்கள் ஆங்கிலம் - கல்வெட்டு - கணிதம் - இசை - நாடகம் போன்ற பல துறைகளில் கற்றுத் துறை போய வித்தகராவார். உரைநடை யெழுதுவதில் இவருக்கு ஒப்பாரும் மிக்காரும் இவர்காலத்தில் இல்லையெனப் புகழ் படைத்தவர், வேல்சு இளவரசர் தமிழகம் வந்தபோது தமிழில் வல்ல இரண்டு பெருமக்கட்குப் பரிசு வழங்கினர். அவருள் ஒருவர் இவர். கரந்தைக் கவியரசர் பாடஞ்சொல்லுவதில் மிகவும் வல்லவர். இதனை யானே துய்த்துணர்ந்தவன். இத்தகைய பெருமக்கள்பால் முறையாகத் தமிழ்க் கல்வியைப் பயின்ற பெருமகன் நம் இலக்குவனர். அவர்களின் திறங்களெல்லாம் இவர்பாலும் விளங்கின,

புலமைத் துறையில் இவருள்ளம் ஆழமாகப் படிந்தது போலவே அரசியல், குமுகாய இயலிலும் இவருள்ளம் ஆழமாகப் படிந்திருந்தது. புலமை அளவில் நின்றிருந்தால்

இன்னும் பல சிறப்புக்களை அவர் பெற்றிருக்க முடியும். அல்லது அரசியல் குமுகாய இயல் என்ற அளவில் நின்றிருந்தாலும் இன்று தமிழகத்தையே ஆளும் தக்க புலவரைத் தமிழகம் பெற்றிருக்கும். இவர் வாழ்வு ஒன்றையொன் றெவ்வாத இவ்விருதுறைக்கும் ஆட்பட்டு இடையூசலாடி அல்லற்பட்டு நின்றமையைக் கண்டோம். அறிவுநிலையில் நாம் ஆயும்போது ஒருவர் நாம் குறித்த இரு மருங்கினும் செயலாற்றலாம் என்றே தோன்றும். உண்மையில் தமிழக நிலை அவ்வாறில்லை.

தமிழக அரசியல் குமுகாய இயல் ஆயவை ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகவே கைத்திறனும் வாய்த்திறனுங் கொண்ட சிலர் கைப்பொம்மையாகவே விளங்கி வந்திருக்கின்றன. நம் பேராசிரியர் இதற்கெதிரான அணியைச் சேர்ந்தவர். இவர் கல்வி பயிலுங்காலத்திலிருந்தே இத்தகையவரெனப் பெயரெடுத்தவர். கரந்தைத் தமிழ்ச் சங்கத்தைச் சங்கம் வைத்தறியாத சோழ நாட்டில் நிறுவித் தமிழின் தூய்மைக்கும் வளமைக்கும் தமிழ் மக்களின் தனிச் சிறப்பிற்கும் இந்நூற்றாண்டில் கலங்கரை விளக்கமெனத் தோன்றித் தொண்டாற்றியவர் சங்கத்தின் முதல்தலைவர் தமிழவேள் த. வே. உமாமகேசுவரனாராவார். இவரை வழிகாட்டியாகக் கொண்டவர் நம் பேராசிரியர். கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் பாலும் அதன் முதல் தலைவர் தமிழவேள் பாலும் இவர் கொண்டிருந்த பற்று அளவிடற்கரியது அவர் விட்டுச் சென்ற தொண்டைத் தொடர்ந்து புலமைத் துறையிலும் அரசியல் துறையிலும் அல்லல்கட்கிடையிலும் விடாது தன்னுடைய வாழ்வின் கடைப்பிடியாகக்கொண்டு தொண்டாற்றியவர் நம் இலக்குவனார் என்று கூறலாம்.

தொடக்கத்தில் இவருடைய உள்ளம் புலமைத்துறையில் ஆழ்ந்து படிந்திருந்தது. காலம் செல்லச் செல்ல இவருடைய உள்ளம் அரசியல் குமுகாய இயலில் ஆழ்ந்து படிந்து உறைந்து நின்றது. இதன் விளைவாக அல்லல்களும் ஒன்றன்பின் ஒன்று

கத் தொடர்ந்தன. தமிழகப் புலவர் குழுவின் அமைப்பாளர் முத்தமிழ்க் காவலர் திரு. கி ஆ. பெ. விசுவநாதமவர்கள் அடிக்கடி கூறுவதுபோலத் தமிழுக்காகச் சிறைசென்ற ஒரே புலவர் இவரென்று கூறுமளவிற்கு அல்லல்கள் இவரை ஆட் கொண்டன. இந்நிலையிலும் நம் பேராசிரியர் சுடச் சுடரும் பொன்போல் ஒளிவிட்டு விளங்கினர்.

நம் பேராசிரியர் இலக்குவனரின் அல்லற் காலத்தில் ஆற்றுந் துணையாக நின்று அவர்கட்குப் பலவகையிலும் உதவி யாக நின்றவர் புதுக்கோட்டை அண்ணல் சுப்பிரமணியனர் ஆவார். இவர் அவருடைய நூல்களை வெளியிட்டுத் தமிழகத் தில் பரப்பிய தமிழ்த் தொண்டராவார். தமிழக மன்னர்களை நாம் கண்டதில்லை. ஆனல் தமிழக மன்னர்களின் கடைசிச் சின்னமாகப் புதுக்கோட்டை மன்னர் விளங்கினர். அவராண்ட நகரில் தோன்றியவர்தாம் நம் அண்ணல் சுப்பிரமணியனர். இவர் சங்ககாலப் பண்ணன்போல மக்கட்குப் பலவகையிலும் பயன்படும் வழியில் வாழ்ந்து வருகின்றவர். நம் பேராசிரி யரை எண்ணும்போது அண்ணலாரை நாம் நினைக்க வேண்டும்.

குமுகாய இயலில் பெரியாரைப் பின்பற்றுபவர் நம் இலக்குவனர். கம்பராமாயணத்தைக் கொளுத்த வேண்டும் என்று பெரியார் கூறினர் அப்போது இலக்குவனர் நூற் களின் குறைநிறைகளை ஆராய்வதும் அவைகளை எடுத்துக் கூறு வதும் முறையாகும், நூற்போக்கில் நாம் காணும் ஒருமருங் காண குறைக்காக இப்பேரிலக்கியத்தைக் கொளுத்தவேண்டா மென்று வாதாடினர். இது தொடர்பாகப் பல வினக்களை எழுப்பினர் நம் பேராசிரியர். இவ்வினக்களுக்கெல்லாம் மறைந்த மாமேதை பேரறிஞர் அண்ணு அவர்கள் அப்போது தாம் நடத்திவந்த 'திராவிடநாடு' என்னுங் கிழமை இதழில் விடை எழுதினர். பல தலைப்புக்களில் அவரெழுதிய விளக்கம் நல்விருந்தென்ன நாவலருக்கும் நாட்டு மக்கட்கும் விளங்

கியது. இன்றும் அவ்வினுக்களையும் விடைகளையும் நூலாக வெளியிட்டால் மிக்க பயனுடையதாக இருக்கும். அரசியல் உரிமை அடைவதற்குப் பல ஆண்டுகட்கு முன்னரே "ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோம்" என்று பாரதி பாடியதை யொப்ப இன்றைய தமிழக அரசு அமைவதற்குப் பல ஆண்டு கட்கு முன்னரே அமையப்போகின்றது என்று கண்டு ஆளும் பொறுப்புக்களும் இன்னின்னருக்கு இவ்வாறிருக்க வேண்டு மென வகுத்தெழுதிக் காட்டியவர் நம் பேராசிரியர். தமிழ் - தமிழகம் - தமிழ்க் குமுகாயம் என்ற அளவில் குறைவின்றிப் படிந்திருந்த அவருள்ளத்திற்கு வணக்கங்கூறி அவர்வழி நம் பயணத்தைத் தொடர்வோமாக!

"உலக வரலாற்றில் நாட்டுரிமை வேட்கையில் வாழ்விழந்தோரைக் காணுகின்றோம், நல்லுழைப்பாளி யுரிமைக்காக நலமிழந்தோரைக் காணுகின்றோம், விடுதலைக் கிளர்ச்சிக்குத் தம்மை ஒப்படைத்தோரைக் காணுகின்றோம், ஆனால் மொழியுரிமைக்காக தம் வாழ்வை ஒப்படைத்த செம்மல்களைக் காண இயலவில்லை. இஞ்ஞான்று, அச்செம்மல், இச் செந்தமிழ் இலக்குவச் செம்மல் எனக் காண்கின்றோம்"

—பேராசிரியர் வீ. முத்துச்சாமி, மு. க.

இசை நட்ட இலக்குவனர் வாழ்க

டாக்டர். தி. முருகரத்தனம்,
மதுரைப் பல்கலைக் கழகம்.

பேராசிரியர் டாக்டர். சி. இலக்குவனர் அவர்கள் தம் பூதவுடல் நீத்தார்கள் என்பதை என்போன்றூரால் நம்ப முடியவில்லை. அவர் நூல்களைக் கற்று அவருடன் பணியாற்றிப் பயின்றுவந்த என்போன்றூர்க்கு அது எளிதல்ல. சாக்காடு எங்கும் காணும் எளிமையுடையதுதான். ‘இடப்பக்கமே நொந்தது என்றூர்; கிடக்கப்படுத்தார்; கிடந்தொழிந்தாரே’ எனத் திருமந்திரம் யாக்கை நிலையாமை பற்றிப் புலம்புவது போன்று சாக்காடு சாதாரணம். ஆனல் நற்பேறும் நற்புகழும் நல்லுடலும் வாய்க்கப்பெற்ற பேராசிரியர் இன்று நம்மிடையே இல்லை என்னும்போது நம்பிக்கை எழுவதில்லை.

எத்தனையோ தமிழாசிரியரைப் போன்று அவரும் ஒரு தமிழாசிரியர் அல்ல; எத்தனையோ கல்லூரிப் பேராசிரியர் போன்று அவரும் ஒரு கல்லூரிப் பேராசிரியர் அல்ல; எத்தனையோ நூலாசிரியரைப் போன்று அவரும் ஒரு நூலாசிரியர் அல்ல. அவர் ஒரு தலைவர்; தமிழியக்கத்தின் தலைவர்; ஆற்றுப்படுத்தும் ஆசான்.

இன்று தமிழகத்தின் அரசியல் சமூக இலக்கியத் துறைகளை இயக்கிவரும் தமிழியக்கம் நீண்ட வழியும் வரலாறும் உடையது. அது சென்ற நூற்றூண்டிலே முளைத்தது. ஐரோப்பியத் தமிழறிஞர்—திராவிட மொழியியல் அறிஞர்—

டாக்டர் கால்டுவெல் என்பாரே அதன் முன்னோடி எனலாம். திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் அவர் நூலே அவ்வியக்கத்தின் ஊற்று. தமிழின் பெருமையையும் தனிமை யையும் முதல் முதலாக உலகுக்கு எடுத்துப் பறையறைந்தார் அந்த அறிஞர். அதுவே இன்றைய தமிழியக்கத்தின் தத்துவம் ஆகியது. அவ்வியக்கத்துக்குப் பரிதிமாற் கலைஞர் நீர்வார்த் தார்; பேராசிரியர் சுந்தரம் பிள்ளை களையெடுத்தார்; தனித் தமிழறிஞர் மறைமலையடிகளும் நாவலர் ச சோமசுந்தர பாரதியும் எருவிட்டனர்; தமிழர் பெரியார் ஈ. வெ. ரா. காத்து வளர்த்தார். இந்தத் தலைவர் வழியிலே — பரம்பரை யிலே—ஒருவராய்த் திகழ்ந்தார் பேராசிரியர் சி. இலக்குவனார். தனித்தமிழ் இயக்கத்திலேயே அவர் தோற்றம் பெற்றார்; தமிழ்ப் பயிரால் ஊட்டமும் ஊக்கமும் பெற்று வளர்ந்தார்; அவ்வியக்கத்தின் தொண்டரானார்; தம் அறிவாலும் உழைப்பாலும் தியாகத்தாலும் அதன் தலைவரும் ஆனார். தஞ்சையிலே பிறந்து விருதையிலே சிறந்து மதுரையிலே வாழ்ந்த ஓர் 'ஆள்' அல்ல அவர். தமிழிலே பிறந்து ஈரோட் டிலே பயின்று பல்லாவரத்தில் உண்டு தமிழகத்தில் உலாவந்த தமிழ்ச் சான்றோர் அவர். அவர் ஒரு தனி ஆள் அல்ல; அவர் ஓர் இயக்கம்; அதனை இயக்குவோரும்கூட. இன்று திருநகர் வெற்றிடமாக விளங்கலாம். ஆனால் தமிழகம் அவரால் நிறைந்திருக்கிறது! அவர் வாழ்விழக்கவில்லை. அவர் வாழ்கிறார். அவர் வந்த வழியும் வாழ்வித்த வழியும் சாகாதவை; அவை 'வரல் ஆறு'.

அவர் பண்பும் பல; பணியும் பல. ஒன்று ஒன்று காணலாம்.

ஒதுக்கிவைத்த தமிழை உயர் தனிச் செம்மொழி எனக் காட்டினார் கால்டுவெல்; கீழை உலகில் ஒப்பதும் மிக்கதும் இல்லா மொழி என அதனை நிறுவினார். தமிழின் தனிமை யினையும் தாய்மையினையும் அவர் போற்றினார். அவர்

பயின்றது நன்னூல் மட்டுமே. ஒல்காப்பெரும் புகழ்த் தொல்காப்பியத்தைக் கால்டுவெல் அறியார். அது அவர் காலத்தில் ஓதுவாரின்றிப் பரண்மீது உறங்கிற்று. கால்டுவெல் அதைப் புரிந்துகொள்ளவில்லை. ஆங்கிலத்தில் அது அமையாததே அதற்குக் காரணம். கால்டுவெல் தொல்காப்பியம் உணர்ந்திருப்பாராஞல் இன்றைய தமிழியக்கம் ஒரு நூற்ருண்டுக்கு முன்னரே உலக இயக்கமாக உருவெடுத்திருக்கும். தொல்காப்பியம் ஆங்கிலத் தேர் ஏறி உலாவரப் பேராசிரியர் இலக்குவஞர் வரவேண்டியிருந்தது. அவர் அதை மொழிபெயர்த்தார். அதன் வழியாகத் தமிழியக்கத்தை அவர் உலக இயக்கமாக மாற்றிஞர் எனல் வேண்டும்.

அவர் பணி கல்லூரிகளில் கழிந்தது. ஆஞல் அவர் உள்ளம் தமிழகத்துக்குப் பணிபுரிய விரிந்த ஒரு களத்தை வேண்டி வேண்டி நின்றது. அவர் ஆர்வத்துக்கும் திட்டத்துக்கும் தமிழக அரசியலே களம். அவர் அங்கும் இங்குமாக அலை பாய்ந்தார். பல்வேறு சூழல்கள் அவர் விரிந்த களத்தில் இடம்பெற முடியாது செய்துவிட்டன. அது அவருக்கு இழப்பல்ல; தமிழகத்துக்கே இழப்பு. தமிழகம் அவரை நன்கு பயன்படுத்திக் கொள்ளவில்லை.

இசை நட்ட இலக்குவஞர் வாழ்க.

"தமிழ்க் குரிசில் இலக்குவஞர் தமிழ் வாழ்வு நாடியவர், தமிழ்த் தெருவில் தமிழ்தான் இல்லை எனுந் தாழ்நிலை போக்க முனைந்தவர், தாங்கொணுப் பெருந் துயரும் ஏற்றவர். தமிழ் உரிமை நாடு என்ற தனித் தமிழ் பேணுகின்ற தமிழ் உணர்ச்சியூட்டுகின்ற தமிழோடு தமிழ்நாட்டில் உலவல் வேண்டுமென்பதில் தணியாத வேட்கை கொண்டவர்"

—பேராசிரியர் வீ. முத்துச்சாமி, மு. க.

சி. இலக்குவனர்

பேராசிரியர் வீ. ப. க சொல்லழகன், மு க.,

ஒல்காப் பெரும்புகழ் தொல்காப்பியத்தை ஆங்கிலத்தில் நல்காதிருப்பது நற்றமிழ் வளர்ச்சிக்கு நல்லதன்று என்றுணர்ந்த, பெருந்தகை சி. இலக்குவனர், பல்கால் முயன்று ஆழமான ஆராய்ச்சிக் கருத்துகள் கண்டு வெளியிட்டுதவியது – வெளிநாட்டுக்குதவியது; உள் நாட்டுக கூட்டியது.

சட்டாய இந்திமொழித் திணிப்பைத் தமிழகத்தில் இரு பெரும் தமிழ்ப் பெரியார்கள் எதிர்த்துப் போரிட்ட நிகழ்ச்சிகள் வரலாற்றுப் பெரும் சிறப்பு நிகழ்ச்சிகள். தமிழ் மொழி வரலாற்றிலும் தமிழ்நாட்டு வரலாற்றிலும் குறித்துப் போற்றற்குரிய சீரிய செவ்விய வீர நிகழ்ச்சிகள். கல்லில் வெட்டி அமைத்து, பொன்னிட்டு நிறைத்து, பல்கால் படித்துப் பாராட்டத்தக்கன அந்நிகழ்ச்சிகள் :—

ஒன்று—நாவலர் கணக்காயர் பண்டாரகர் ச. சோமசுந்தர பாரதியார், அவிநாசிலிங்கம் அமைச்சரா யிருந்தகாலத்தும்; சி. ராசகோபாலாச்சாரியார் காலத்தும் இந்தி மொழித் திணிப்பை எதிர்த்து நிறுத்தி வெற்றிகண்ட நிகழ்ச்சி. மன்றொன்றில் அதனினும் சீரிய கடும் போர் புரியவேண்டிய சூழ்நிலை எழுந்தது; இந்தி, புயலென வந்தது. மலை எனத் தடுத்து நிறுத்தியவர் தண்டமிழ்த் தலைவர் சி. இலக்குவனரே. கல்லூரிப் பயிற்றுமொழியானது தமிழாக இலங்க வேண்டுமெனப் படைதிரட்டினர்; சென்னை வரைப் பெருநடைப் பயணம் செல்ல இருந்தார். அக்காலத்து இருந்த பேராயக் கட்சி இலக்குவனரைத் தளையிட்டு வழக்குத் தொடுத்தது. மதுரை வழக்கறிஞர் சிலர் ஒன்று சேர்ந்து – இலக்குவனரைச் சிறையிடுவது கூடாது எனத் தருக்கம் புரிந்தனர். அவருள் பொதுவுடைமைக் கட்சி, ராமசுப்பிரமணியம் குறிப்பிடத்தக்க வகையில் தருக்கம புரிந்தார். ஆயினும் அரசுச் சார்பினரின் வன்கை ஓங்கி நின்றது; நடுநிலை நீங்கியது; அறநிலை அற்றது;

சிறைநிலையே தந்தது. அந்த வழக்கு மன்றத்திற்கு-நான் சென்று முடிவுவரை நின்றிருந்தேன். அச்சத்தின் காரணமாக-மற்றைய எந்தத் தமிழாசிரியரும் அங்கு வரவில்லை. அம்சவல்லி உரிமையாளர் கோபால் பிள்ளை என்னுடன் வந்து நின்றிருந்தார். இலக்குவனார்க்கு வேண்டிய நல்லுதவிகளைத் தமிழ் காக்கப் போரிட்ட காலத்தில் புரிந்தார். அம் மேலாளர் மீது, அன்பு மயமான இறைவன் அருள்பொழிந்து, மேலும் தமிழ்ப் பற்றிலே, வழி நடத்துவாராக.

இலக்குவனார் சிறையிருந்த காலத்துப், பல கொடும் துன்பங்கள் பட்டார்; ஒரு சிறு நிகழ்ச்சியினின்றும் அவர் சிறையில் பட்ட இன்னல்களை உணர்த்த விரும்புகிறேன். என் முதல் மகனின் திருமணம் அவர் தலைமையில் நடக்க இருந்தது ஆனால் அவர் சிறை கிடந்தமையால்-ஒரு வாழ்த்து அனுப்புமாறு வேண்டிச் சிறைக்கு முடங்கல் விடுத்தேன். வாழ்த்து எழுதியனுப்ப-அவருக்கு ஒரு தாள் கிட்டவில்லை. ஆயினும், செய்தித் தாளின் ஓர் மூலையைக் கிழித்து வாழ்த்து எழுதியனுப்பினார். அதனைத் தணிக்கைத் தலைவர் பார்த்து, "ஒப்புதல்" என எழுதியிருந்தார். இதனைக் கண்ட என் கண்களில் கண்ணீர் கசிந்தன சிறைகிடந்த காலத்தும் எந்தத் தமிழ்ப் பேராசிரியர்களும்-அவருக்கு ஆறுதலாக முடங்கல் எழுதவில்லை அவர் போரிட்டு இந்தி எதிர்த்த காலத்தில் எல்லாம் நல்லாசிரியர் முத்துச்சாமி ஒருவர் மட்டும் இலக்குவனார்க்குப் பல பணிவிடைகள் மெய்யாகப் புரிந்து அன்பு கூர்ந்தார். சிறை வீடு பெற்று மதுரைப் புகைவண்டியில் இறங்கியபோதும்-ஆசிரியர் என்ற வகைக்கு-நானும் முத்துச்சாமியும், வேறு சில மாணவப் பெருந்தகைவர்களும் சென்று மாலையிட்டு வரவேற்றோம். இதனின்றும் தமிழுக்குழைத்த தண்டமிழ்ப் பேராசானுக்கு எத்துணை ஆதரவு, இருந்தது என்பது அறிதற்குரியது. வ. உ. சிதம்பரனார்-சிறை வீடு பெற்றபோது நிகழ்ந்ததே-இலக்குவனார்க்கும் நிகழ்ந்தது.

இவருடைய நூல்கள் சிலவற்றைப் பெருஞ் செலவில் புதுக்கோட்டை அண்ணலார், சுப்ரமணியம் வெளியிட்டு, பேராதரவு ஈந்ததை என்றுமே மறக்க இயலாது இலக்குவனார்-ஒருகாலத்து வேலையின்றி யிருந்தபோது-அண்ணலார்

தமிழ்ப் பற்றினராதலால், இலக்குவர்க்கு இனிய உதவிகள் ஆற்றினர்

இனி, இலக்குவனாரின் சிறப்பினை சுருக்கமாகச் சொல்லி முடிக்கின்றேன்.

1) கல்லூரிகளில் மாணவர்க்கு மட்டில்லாத தமிழ்ப் பற்றினை ஊட்டியவர்.

2) "குறள் நெறி" திங்கள் ஈரிதழ்த் தாளிகை மூலம் இந்தித் திணிப்பை எதிர்த்தவர்.

3) அஞ்சாத நெஞ்சம் படைத்தவர்.

4) முத்தமிழே என் மூச்சு என முழங்கியவர்.

5) சுருங்கச் சொல்லி விளங்கவைக்கும் சொல் ஆற்றல் வியத்தற்குரியது.

6) நுண்மாண் நுழை புலமிக்கவர்.

7) கல்லூரிப் பயிற்றுமொழியைத் தமிழாக்கத் தமிழ்ப் படை திரட்டினர். அது பெருநடைப் பயணம் செய்ய இருந்தது. அப்பொழுதிருந்த பேராயக் கட்சி இவரைக் காப்புச் சட்டத்தின் கீழ்த் தளைப்படுத்திச் சிறையிலிட்டு இன்னல் செய்தது, விஞ்சிய இன்னல் கண்டு அஞ்சினரிலர்.

தமிழுக்காகவே வாழ்ந்தார்.

தமிழுக்காகவே மாண்டார்.

இவர் விட்டுச் சென்றுள்ள பெருங் குடும்பத்தினர்க்குத் தமிழக அரசு இரங்கி நாடி உதவி நல்க, நல்ல பதவி நல்க, இறைவனை வேண்டிக் கொள்வோம். இலக்குவரின் பெயராலே ஒரு நிலையான இந்தி எதிர்ப்பு மன்று ஒன்றும் நிறுவுதல் வேண்டும்.

வீ. ப. கா. சொல்லழகன்,
இலக்குவனாரின்
தமிழ்க் காப்புக் கழகத்தின்
வெளியீட்டுத் தலைவர்.

எந்தை ஈந்த இனிய நினைவுகள்

— தமிழ்த்தொண்டன் ஆ. ஆண்டியப்பன் —

உலகிலே மனிதன் பிறக்கிறான். வாழ்கிறான். மறைகிறான் போம் உடல் போகிறது என்றாலும் காலம் என்னும் பெரிய மணற் பரப்பிலே தமது அடிச்சுவட்டைப் பதிய வைத்துச் செல்கிறான். அவனது வாழ்விலே முகிழ்த்த எண்ண அலைகள் அவன் நெஞ்சத்திலே மோதி வண்ணக் கலைகள் மிளிர்கின்றன. எண்ணற்ற அறப்பணிகள் மலர்கின்றன. புறப்பணிகளும் சிறக்கின்றன. தமக்கென உரிய பொன்றாப் புகழை நிறுவிச் செல்லுகின்றனர்.

வரலாற்றை ஆய்ந்து பார்க்கும்போது ஒவ்வொரு துறைகளில் உரிய பணிகளைச் செய்து தமக்கென உரிய புகழை இயன்றவரை நிறுவியுள்ளனர் என்பதை அறிய முடிகிறது.

உழைத்து உழைத்து உடல் நலிந்த உழைப்பாளிகள் உயர்வுக்காக உரிமை வேண்டி ஒப்பற்ற பணியாற்றிய உயிரஞ்சா மறவர் பலர். மடமை இருளகற்றி அருள் விளக்கேற்றிய சமயச் சான்றோர்கள் பலர். மூடக் கொள்கைகளை முறியடித்து சீர்திருத்தம் செய்த செம்மல்கள் சிலர். விடுதலை வேட்கையில் நாட்டுரிமையில்பங்கேற்று உயிர்த்தியாகம்செய்த நல்லுத்தமர்கள் பலர். உள்ளம் சோராது உறுதி குன்றாது மொழிகாத்து, புதுப்புது வழிகளில் முழக்கமிட்டு பல்வகைப் பெருமைக்கும் நிலைக்களனாக விளங்கிய பண்பாளர்கள் மிகச் சிலரேயாவர். அத்தகையோரின் வரலாற்றை, வாழ்க்கை முறைகளை வழி வழி வருவோர்கள் படிக்கின்றனர். அவர் தம் நினைவாகப் பெருவிழாக்கள் கொண்டாடுகின்றனர். இதுவே இன்றைய நாளில் பெரு வழக்காக இருந்து வருகிறது.

அத்தகு போற்றற்குரிய சான்றோரில் 20ம் நூற்றாண்டில் உயிர் தமிழுக்கு உடல் மண்ணுக்கு' என்று வாழ்ந்து காட்டிய

வராய், தமிழர் மனதில் அரியணை ஏறிய அடலேறாய் கெள்ளு தமிழ் விளக்கும் பண்டாரகராய் விளங்கியவர் சி. இலக்குவனார் அவர்களே தாம் என்று துணிந்து கூறலாம்.

வற்றாத காவிரிபோல், செந்தமிழ்ப் புலமையூற்று பெருக்கெடுத்து பொதிகை முனிவனுக்கிணையாக விளங்கிய தமிழ்க் குரிசில் இலக்குவனாரே யாவர் என்றால் மிகப்படுத்திக் கூறுவதன்று!

தனக்கென ஒருமானம் உண்டு என்றால் அதுதான் தமிழ் மானம், தாய்மொழி மானம், என்று தன்மானம் காத்தவர், தமிழால் பிழைக்கின்ற தருக்கர் கூட்டத்தைப் பிளந்து கிளர்ந்தெழுந்து தமிழமுதூட்டி தமிழுக்கே தமது வாழ்வைத் தந்த புதுமை வேந்தர். பைந்தமிழைப் பழுதறப் படித்தறிந்த தமிழ் வேந்தன். ஓங்கு புகழ் மொழியின் பெருமையை வீங்கு புகழ்ஞாலமெல்லாம் தமிழ் நெறி பரவ, பாங்குடனே முன் வந்த, பைந்தமிழ்க் குரிசில். தமிழுலகிற்குக் கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்த கதிரொளிதான் இலக்கணச் செம்மல் இலக்குவனார் என்பதை அறியாதார் யார்?

'தமிழின் உயர்வே தமிழன் உயர்வு' என்னும் சங்க இலக்கியப் பெரும் பண்போடு செந்தமிழ் நாட்டின் தெருவெல்லாம் தமிழ் முழங்கச் செய்து, தமிழின் உயிரான தொல்காப்பியத்தை ஆங்கில மொழியில் வடித்து உலகமெங்கும் வண்டமிழ் வளத்தை வாரி வாரி வழங்கிய தண்டமிழ்த் தலைவன். அமிழ்தனைய தமிழுக்கே தமது வாழ்வை ஈந்த பெருமனச் செம்மல் 'தமிழுக்குத் தடை செய்யும் நெடுங்குன்றும் தூளாகும்' என்று முழக்கமிட்டு, மொழிக் கிளர்ச்சியின்போது புயல்போல் வந்த இந்தி மொழியை மலை போல் நின்று தடுத்து நிறுத்திய எஃகு உள்ளம் கொண்ட ஏறு நடையோன். இருபதாம் நூற்றாண்டு நக்கீரன் எனப் போற்றப்பட்ட அன்னாருக்கு அன்றையத் தமிழக அரசியலார் தந்த பரிசு? வேலூர் சிறை! பதவி இழப்பு! புரட்சியில் புகுந்த புலவர் கலங்கினாரில்லை. கடமையிலிருந்து தவறி

ஞரில்லை காப்பியம் யாவையும் கற்றுத்தெளிந்த அறிவுச் செம்மல் தமிழ்க்காப்புக் கழகம் நாட்டிய கதிரொளி, வீடெல்லாம் தமிழ்மணக்க, நாடெல்லாம் புகழ் மணக்க ஒண்டமிழ் பேணிய அத்தண்டமிழ்த் தலைவன் தன் உடல் நலக் குறைவால் மருத்துவமனையில் தங்கி மருந்துண்டு வந்தார்.

அது போழ்து நானும், செந்தமிழ்த் தேருக்கு அச்சாணியாக விளங்கி வரும் எனது அருமைச் சகோதரன் பொன்னு ராமன் அவர்களும் மருத்துவ மனைக்குச் சென்றோம்.

அகத்தினில் அன்பைத் தேக்கி, முகத்தினில் புன்னகையைக் கூட்டி, மொழியினில் இனிமையை வடித்து, உயிரினில் தமிழைக் குழைத்து, பொன்னை மதியாது, புகழை நாடாது போற்றும் தமிழினைக் காத்த தன்னேரில்லாத தமிழ் மலை எங்களை வரவேற்றபடி கட்டிலிலே சாய்ந்திருந்தது.

உரையாடிய ஒரு மணி நேரத்தில் பேசியது "குறள் நெறியால் முரசொலித்து குவலயமெல்லாம் குளிர் தமிழ் விளங்கச் செய்த செந்தமிழ்க் குரிசில் நோய்வாய்ப்பட்ட நிலை பற்றியா? இல்லை! தமது மனைவி மக்கள் நிலை பற்றியா? இல்லை! இல்லை! சொத்துச் சுகங்கள் பற்றிய பேச்சுக்களா? இல்லை! இல்லை! இல்லை!

வண்டமிழ் பேணி வளர்த்த தண்டமிழ் நாட்டிலே தமிழ் படும் நிலையினையும், தமிழ்ப் பயிர் விளை நிலமாக விளங்கிய மதுரையில் தமிழ்ப் பேராசிரியர்கூட வேற்று மொழிச் சொற்கள் (ஆங்கிலம்) கலந்த தமிழிலே பேசும் நிலையையும், மொழி வளர்ச்சிக்காகப் பாடுபடுகிறேன் என்று பறை சாற்றுவோர் செய்யும் மொழிக் கொலை பற்றியும் எடுத்துக்கூறி வேதனைப் பட்டார். மனம் கொதித்தார். நோயின் காரணமாகக் களைப்பு அதிகமாகிவிட்டது. என்றாலும் தொடர்ந்து உரையாடினார் நோயின் துன்பம் மறந்தார்.

மதுரையில்தான் திருவள்ளுவர் பிறந்தார் என்றும் மதுரைத் தமிழ்ச் சங்கத்தில்தான் குறள் அரங்கேற்றமானது

என்றும் சொல்லுகிறார்கள். எனவே இந்த மதுரையிலேயே வள்ளுவர் சிலை வைக்க வேண்டுவது தமிழ் மக்களது கடமையாகும்.

நான்காம் தமிழ்ச் சங்கம் நிறுவிய வள்ளல் பாண்டித்துரைத் தேவரவர்களை மறந்துவிட்டனர். தமிழ்ப் பண்பாடு காக்க, தமிழர் தமிழர்களாக வாழ வழி காட்டியவர். மதுரைத் தமிழ்ச் சங்கத்தை அவர் தோற்றுவித்துப் பணி செய்யவில்லையென்றால் தமிழ் என்னவாகியிருக்கும். நாம் பேசுகிற தமிழே இப்பொழுது இருந்திருக்காது. யார் யாருக்கோ சிலை வைக்கிறார்கள். வைக்கட்டும். ஆனால் பாண்டித்துரைத் தேவருக்குச் சிலை அமைக்கவில்லை. மதுரையில் நல்ல இடத்தில் அவரது உருவச் சிலை அமைக்க வேண்டும். பைந்தமிழ் உள்ளவரை பாண்டித்துரைத் தேவரை மறக்கவா? மறக்கக்கூடாது. இப்பொழுது சிலை யெழுப்ப முயற்சி செய்து வரும் பாண்டித்துரைத் தேவர் பைந்தமிழ்ப் பேரவையின் முயற்சியைப் பாராட்டுகிறேன். பயன் கருதாப் பணியாளர் ஆண்டியப்பன் என்பதைப் பலரும் அறிவர். செயலில் வெற்றி பெறுவார்.

தமிழாராய்சிக் கழகம் நிறுவவேண்டும். அதற்குப் பாண்டித்துரைத் தேவர் பெயரை வைக்கவேண்டும் ஆங்குத் தமிழ்ப் புலவர்களையெல்லாம் அழைத்துச் சிறப்பிக்க வேண்டும். அப்பொழுதுதான் நல்லதமிழ் நாட்டிலே ,தவழ்ந்திடும். மொழிப் பற்று மிகுந்த மாணவர்களை உருவாக்கமுடியும். தமிழ் அழிந்தால் தமிழ்நாடே அழியுமய்யா. தமிழ்க்காப்புக் கழகத்தைத் தொடர்ந்து நடத்துங்கள். தமிழ்ப் பணிபுரிய பொன்னுராமன் தயங்கமாட்டார். இளந் தலைமுறையினர்களுக்கு ஊக்கமளிக்கவேண்டும்” என்று தமது உள்ளக் கருத்தினை கள்ளம் சிறிதேனும் கருத்தில் கொள்ளாத, இனிய மொழிகளால் எடுத்துக்கூறி இதனை நிறைவேற்றுங்கள் எனக் கட்டளையிட்டார்.

இளைத்த உடம்பானதினாலும், நோயின் காரணமாக குரல் தளர்ந்திருந்தது என்றாலும், அருந் தமிழ் வீரம் காட்டும் அப்பெருமகனாருக்கு இதனைக் கூறும்பொழுது குரல் மறப்

பண்பினைக் காட்டியது. கண்களில் நீர் கலங்க அத்திருமகனுர் பேருரைகளை அறிவுரையாக ஏற்றுக்கொண்டோம். விடை கொடுத்தனுப்பினுர். சின்னுளில் விடையும் பெற்றுச் சென்ருர்.

இல்லை! இல்லை! தென்னிலா வள்ளல் பாண்டித் தரைத் தேவர் பொன்னடி போற்றும் புகழ்மிகு தொண்டனுய், அவர்தம் திருவடிகாணச் சென்றுவிட்டார்.

வாழ்க இலக்குவன் திருநாமம்!
வளர்க அவர்தம் தமிழ்ப்பணிகள்! *

சுருங்கிய சொல்லமைதி

பேராசிரியர் இலக்குவனுருடன் உரையாட ஒரு பெரியவர் வந்தார்; அவர் நன்கு பழகிய நண்பர்; ஒரு கல்லூரியின் முதல்வர். தம் உரையாடலின் இடையே "ஆங்கிலத்தைப் போல் சுருங்கிய சொல்லமைதி தமிழில் இல்லை" என்று தொடங்கி, "is என்பதை 'இருக்கிறது' என்றும் 'are' என்பதை 'இருக்கின்றன' என்றும் எவ்வளவு விரித்துச் சொல்ல வேண்டியது இருக்கின்றது" என்று எடுத்துக் காட்டினுர். இதனைக் கேட்ட பேராசிரியர் சட்டெனப் பதில் வழங்கினுர்; "தமிழில் தேர்ச்சி வேண்டும்; அல்லது ஆங்கிலத்தில் தேர்ச்சிவேண்டும்; இரண்டும் இல்லாயல் கொண்டதே கோலம் என்று ஒரு முடிவுக்கு வருவது தவறு. இருக்கிறது, இருக்கின்றன என்று ஏன் சொல்ல வேண்டும்? 'is' என்பதற்கு 'உளது' என்ருல் என்ன? 'are' என்பதற்கு உள என்ருல் என்ன? ஓர் எழுத்து ஈரெழுத்துச் சொற்களே மிக்குடையது தமிழ்மொழி. அதை முதலில் தெரிந்து கொள்ளுங்கள் 'அடித்தவனைப் பார்த்தேன்' என்று தமிழில் எவ்வளவு இயல்பாகச் சுருங்கிய சொற்ருெடர் அமைந்துவிடுகின்றது. ஆங்கிலத்தில் அதைச் சொல்லுங்கள்; 'அடித்தவன் எவனே அவனை நான் பார்த்தேன்' என்றல்லவா சொல்லவேண்டும்" என்று மடக்கி ஒடுக்கினுர்.

"சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது"

வழங்கியவர்: புலவர் இரா. இளங்குமரன்.

பண்டாரகர்

சி. இலக்குவனர்

பூ. சொல்விளங்கும்பெருமாள்

முன்னுரை

" உங்கள் பெயர் என்னய்யா?" "திருவனந்த பெருமாள் "

" நல்ல தமிழ்ப் பெயராக இருக்கிறதே; உங்கள் தம்பிக்கா எம்.ஏ. யில் இடம்வேண்டும்; பையன் பெயரென்ன? "

" சொல்விளங்கும் பெருமாள் "

" வியப்பாக இருக்கிறதே உங்கள் குடும்பத்திலுள்ள மற்றவர்கள் பெயர்கள் எல்லாம் எப்படி ? "

" என் தந்தையார் பெயர் பூவணைந்த பெருமாள் அண்ணன் அருந்தவக்குட்டி... "

" பையனைப் பார்க்கவும் வேண்டாம்; நேர்முகத் தேர்வும் வேண்டாம்; பையனது பெயருக்காகவே எம். ஏ. யில் இடம் கொடுக்கிறேன்; வரச் சொல்லும்." மேற்கண்ட உரையாடல் என் தமையனுருக்கும் எனது பேராசிரியர் இலக்குவனருக்கும் 1958 சூலைத் திங்களில் ஒருநாள் நாகர்கோவில் இந்துக் கல்லூரியில் நிகழ்ந்தது. பேராசிரியரின் தமிழ்ப் பற்றினை அறிந்து வியந்த எனக்கு அவர் மீது ஒரு தனி ஈடுபாடு உண்டாயிற்று. அவர் தனித் தமிழில் பேசுவதும், தமிழ்ப் பற்றினை மாணவர்க்கு ஊட்டுவதும் பலருக்குப் பிடிக்காது என்பதனை நாங்களறிவோம். கிண்டலும், கேலியும் செய்யும் கீழ்க் கூட்டத்தினை நாங்கள் அன்றும் கண்டதுண்டு.

அத்தகு செந்தமிழ்த் தென்றல் நம்மிடை இல்லாவிடினும் அதன் நறுமணத்தினை நுகர்ந்த பட்டறிவு நினைவலைகளில் சுழன்றுகொண்டே இருக்கின்றன.

தொல்காப்பியர் விழா

நாகர்கோயில், தமிழ்ப்பற்று நிறைந்த நாஞ்சில் நாடாக இருந்தபோதிலும் அங்குத் தமிழ் விழாக்கள் நடை பெறுவதெல்லாம் அன்று அரிதாகவே இருந்தது. அங்கொன்றும் இங்கொன்றுமாக இலக்கிய மன்றக் கூட்டம் நிகழுமேயன்றி பெருவிழாக்கள் எடுக்கப்பெறவில்லை. பேராசிரியர் அங்கு வந்து கல்லூரி முதல்வரான 1958ல், தொல்காப்பியர் விழாவும், திருவள்ளுவர் விழாவும் எடுத்து நகரத்தையே வியப்பிலாழ்த்தினர். செண்டை, சிலம்பு, மேளதாளங்கள், மயில், ஒயிலாட்டங்கள் நிறைந்த, ஒரு கல் அளவு நீண்ட, இலக்கிய ஊர்வலம் ஒன்று நடத்திக்காட்டிய வரலாறு படைத்தார். கோட்டாறு, நாகர்கோவில் போன்ற நகரத்துவாழ் மக்களும், மாணவரும் ஆயிரக்கணக்கில் அதிற் கலந்துகொண்டனர்; பொருளுதவி செய்தனர். தமிழ் விழாவுக்கும் ஊர்வலம் வருமோ என எண்ணியவர்கள் தலைகவிழ்ந்தனர். அத்தகு பெருவிழாக்கள் எடுத்து மக்கள் நெஞ்சில் தமிழ்ச் சுடர் ஏற்றி வைத்தார் பேராசிரியர்.

தமிழில் ஒலியில்லையா ?

ஒருமுறை பேராசிரியர் தனது நெருங்கிய நண்பரான ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்களைப் பேச அழைத்து வந்தார். பேச்சாளர் அண்மையில் வெளிநாடு சென்றுவந்தவர் என்று அறிமுகப்படுத்தப்பட்டார். பேசியவர் " தமிழில், ஆங்கிலத்தில் உள்ள ஒலிகள் இல்லை; g, b, b, s, f போன்ற ஒலிகள் தமிழில் இல்லாததால் ஆங்கிலம்போல் வளர வாய்ப்பில்லாமல் போகிறது; தமிழ் என்றும் தமிழ்ப்பற்று என்றும் பேசுகிறவர்கள் இக்குறைகளை உணரவேண்டும்" என்று கூறினர்.

வந்த விருந்தினர் பேசி முடிக்கும்வரை அமைதியாக சிரித்துக்கொண்டே இருந்த பேராசிரியர் முடிவுரையில், "நண்பரவர்கள் அண்மையில் வெளிநாடு சென்று வந்திருக்கிறார் அதனல்தான் அவ்வாறு சொல்கிறார். ஒவ்வொரு மொழிக்கும் உள்ள ஒலிகள் அதன் தனித்தன்மையைக்

காட்டுமேயன்றி ஒலியின்மை அதன் குறையாகாது. ஜ ஒலி தங்கம் எனும் நற்றமிழில் வரவில்லையா? h ஒலி காகம் எனும் சொல்லில் வரவில்லையா? தமிழின் சிறப்பினைக் குறையெனல் மொழியின் குறையன்று; மொழியறிவாரின் குறையே என்றார். ழ, ற, ன, ண போன்ற ஒலிகள் பிறமொழியில இல்லாதிருப்பது அம்மொழியின் குறையன்று; அம்மொழிக்கு அவைதேவையில்லை என்பதே பொருள். தந்தையின் சட்டையைத் தனையனுக்குப் பூட்டமுயன்று, பொருந்தவில்லை என்றால் சட்டையின் தவறா? பூட்டியவரின் தவறேயாம்' என்றெல்லாம் கூறி அவையோரின் புருவத்தை வில்லாக்கினார். பேராசிரியர் தமிழுக்கு இழுக்கெனில் நமக்கென்னவென அடங்கிக்கிடக்க மாட்டார்; எதிரி ஏற்றுக்கொள்ளும் வரை விடமாட்டார்.

வகுப்பில் பிறசொல் :

ஒருநாள் யாப்பருங்கலக் காரிகை நடத்திக்கொண்டிருந்தார். 'ஐயா ஒரு சந்தேகம்' என்றேன் நான். பேராசிரியர் முகத்தில் கருமேகம் திரண்டது; புத்தகத்தை மேசைமீது போட்டார். நிலைமையை உணர்ந்த நான், ''ஐயா மன்னிக்க வேண்டும், தெரியாமல்... ''ஐயா நமது வகுப்பில் மறந்தும் பிறசொல் பேசலாமாய்யா?; அதற்காகவாய்யா நான் இத்தனை பாடுபடுகிறேன்'யா? ஐயம் எனும் சொல்லிருக்க ஐயர் சொல் ஏனய்யா?'' நான் கண்ணீர் விட்டு அழாக்குறையாக எத்துணை வேண்டினும் மனம் ஒப்பினாரில்லை. கேட்ட ஐயம் போன இடம் தெரியவில்லை. அன்றிலிருந்து வகுப்பில் யாரேனும் மறந்தும் பிறசொல் கலப்பாரோ?

நிறுவனங்கள் .

தமிழ் மீது பேராசிரியருக்குரிய காதல் இத்துணையளவு என்று அளக்கலரிது. தமிழ்க்காப்புக் கழகம் என்ற ஒரு நிறுவனம் கண்டு நன்முறையில் நடத்திவந்தார். இளைஞர் எழுச்சிக் கழகம், மதுரை எழுத்தாளர் மன்றம், உலகத் தமிழ்க் கழகம், தமிழ்ச் சங்கம் போன்ற நற்றமிழ் நிறுவனங்களோடு உயிர்த் தொடர்புகொண்டிருந்தார்.

தமிழ்

சென்னையில் 1968ல் நடந்த உலகத் தமிழ் மாநாட்டில் பேசிய ஓரன்பர் இன்னும் முப்பதாண்டுக் காலத்திற்குத் தமிழ், பாடமொழியாகும் தகுதிபெற வாய்ப்பில்லை என்றார்; மற்றொருவர் தமிழ் எழுத்து வடிவம் பெற்றது கி. பி. 3-ம நூற்றாண்டிலேயாம் என்றார். தக்க ஏதுக்கள் காட்டி நம் பேராசிரியர், தமிழின் தகுதியையும், தொன்மையையும் நிலை நாட்டினார். அதனால் சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம் போன்றோர் பேராசிரியரை மனதாரப் பாராட்டிப் புகழ்ந் தனர்.

வாழ்வா-தமிழா

பணமும் பதவியும் அவரது தமிழ் நெஞ்சத்திற்கு இடை யூறாக இருந்தனவென்றால் அவற்றை உடம்பில் ஒட்டிய தூசு என உதறிவிட அவர் என்றும் தயங்கியதில்லை. உசுமானியா பல்கலைக் கழகத்தில் பேராசிரியராக (1970-71) இருந்தபோது 'ஊதியத்திற்குக் குறைவில்லை; தமிழ்தான் பேச வாய்ப்பில்லை; என்னைப் பொறுத்தவரையில் நாடு கடத்தப்பட்டிருக்கிறேன்' என்றார். தமிழும், தமிழரும் இல்லாத இடத்தில் பணத்திற் காக மட்டும் எவ்வளவு நாட்கள் தொங்கிக்கொண்டிருக்க முடியும். விட்டுவிட்டு தமிழகத்திற்கு வந்துவிட்டார்.

கோவையில் அன்றைய கல்வியமைச்சர் ஆங்கிலத்தினை ஆதரித்துப் பேசுகையில் பேராசியர் எழுந்து 'தமிழ் நாவலர் ஆங்கிலத்தின் காவலர் ஆகிவிட்டார்' எனத் துணிந்து கூறி னார். நெஞ்சிற்கும் நாவிற்கும் இடையே வஞ்சகத் திரை போட்டுப் பேசும் பழக்கம் அவரிடம் என்றும் இருந்ததில்லை. இதனால் அவர் இழந்த பேறுகள் பல; ஈட்டிய புகழ் நிலையானது.

இந்தி எதிர்ப்புப் போராட்டக் காலத்தில் அன்று மதுரை நகரில் தமிழாசிரியருக்குள் பெரும் சம்பளம் வாங்கிக்கொண் டிருந்த பேராசிரியர், பணத்தினைப் பெரிதென எண்ணாது தமிழ் எண்ணத்திற்கு முதலிடம் கொடுத்தார். பதவியைத் துறந்தார்; தம்மால் பெரிதும் மதிக்கப்பட்டவர்களின் தொடர்

பிணையும் இழந்தார்; காவலர்களின் கடுமையான நடவடிக்கை யினால், தெரிந்த நண்பர்கள் எல்லோரும் அவரைவிட்டு ஒதுங்கினர். தன் ஒருவருடைய வருமானத்தையே நம்பிக்கொண்டிருந்த பெரிய குடும்பமும் வறுமையிலாழ்ந்தது. எதற்கும் அஞ்சாது துணிந்து நின்றார். பணத்திற்கும் பதவிக்கும் தமிழைத் துறக்கும் இக்காலத்தில் தமிழுக்காக எல்லாவற்றையுமே துறக்கும் எஃகு நெஞ்சமுடையோராக விளங்கியவர் இலக்குவனார். வாழ்வா தமிழா என்று போராட்டம் வந்த காலத்தில் எல்லாம் தமிழினைக் கொண்டு வளமான வாழ்வினையே பேராசிரியர் துறந்திருக்கிறார்.

ஊக்கம் கொடுத்தல்

மாணவர்களுக்குத் தமிழ் மீது ஆர்வம் வரும்பொருட்டு பல வகையில் ஊக்க மூட்டுவார். பேராசிரியர் நாகர்கோயிலில் முதல்வராக இருந்த காலத்தில் ஒவ்வொரு வியாழக்கிழமையிலும் இலக்கியப் போட்டி நடத்திப் பரிசுகள் ஈவார். முதல் மதிப்பெண்பெற்ற மாணவருக்கு ஆண்டின் இறுதியில் 'இலக்கியச் செல்வன்' எனும் பட்டம் சூட்டுவதாக இருந்தது. அவ்வாறு நல்ல மதிப்பெண் பெற்றதற்காக இலக்கியச் செல்வன் பட்டத்தினை 1959ல் எனக்குச் சூட்டி மகிழ்ந்தார்.

ஐந்திற்கு இரண்டு

தமிழ்க்காப்புக் கழகத்தில், கருமுத்து சுந்தரஞ் செட்டியார் தலைமையில் ஒரு கூட்டம் நிகழ்ந்தது. பேச்சின் இடையில், 'ஐந்திற்கு இரண்டு பழுதில்லை 'அதாவது' நூற்றுக்கு நாற்பது' என்று விளையாட்டாகக் கூறினார். அப்பொழுது கூட்டத்தில் இருந்து ஒரு பெரியவர் எழுந்தார். (அக்கூட்டம் நடந்த பள்ளியில் பணியாற்றும் கடைநிலை ஊழியர்) 'நானறிந்த ஒன்றினை இப் பேரவையில் கூறலாமா' எனத் தயங்கிக்கொண்டே வினவினார். பேராசிரியர் வரவேற்றார்.

"ஐந்து (ற்) கு இரண்டு (ற்) பழுதில்லை என்பதுதான் 'ஐந்திற்கு இரண்டு பழுதில்லை' என வந்திருக்கிறது.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத்தக" எனும் குறளில்

ஐந்து 'ற்' வந்துள்ளது.

"கற்றதனாலாய பயனென் கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்" எனும் குறளில்

இரண்டு 'ற்' வந்துள்ளது ஐந்திற்கு இரண்டு பழுதில்லை கல்வியைவிட இறைப்பற்றே சிறந்தது என்பதே கருத்தாம்." என்று கூறிய பெரியவரைப் பாராட்டினர். எழுத்தெண்ணும் வேடிக்கை தனக்குப் பிடிக்காது என்றாரேனும் திருக்குறளை எதேனும் ஒரு கோணத்தில் ஆய்ந்த அப்பெரியவரை வாயாரப் பாராட்டினர்.

தன்னம்பிக்கை ஊட்டி மாணவர்களை ஊக்கப்படுத்துவதில் பேராசிரியருக்கு இணை அவரே. பி. எஃசி பட்டம் பெற்றவர்களுக்கு தமிழ் எம். ஏ. வகுப்புக்களில் தமிழ் இலக்கணம் சின்னாட்களுக்குத் தலைகால் புரியாது. பேராசிரியர் கொடுக்கும் ஊக்கத்தாலே அது மனதில் [illegible]யும். மாணவர்கள் தங்கள் கைகளில் தார்ச் சட்டித் தூக்கித் தெருக்களில் காணப் படும் தமிழ்க் கொலைப் பெயர்களை அழித்தல் வேண்டும் என்பார் சிறு வெற்றிலைப் பாக்குக் கடைகளிலும், பெரிய உணவு விடுதிகளிலும், வண்ணக் குடிகளுக்கும், உணவு வகை களுக்கும் நற்றமிழ்ப் பெயர்களைச் சூடவேண்டும் என்று ஊக்க மூட்டுவார். பணமுடையால் கல்லூரிக்குப் பணம் கட்டாத ஏழை மாணவர்களுக்குத் தாமாகவே முன்வந்து உதவுவார்.

உலகம் தெரியாதவர்

எங்கள் பேராசிரியரைப் பற்றிப் பிறர் கூறும் குறைகளுள் முதன்மையானது: அவருக்குப் பிழைக்கத் தெரியாது; வளைந்து கொடுக்கமாட்டார் என்பதேயாம். அஃதொன்றும்

குறையாகாதே. நாணலுக்கும் மூங்கிலுக்கும் ஏற்கும் சட்டம் லவரத்திற்கு ஏற்குமா?

மதுரைப் பல்கலைக் கழகப் பேரவைத் தேர்தலுக்கு (Senate) வேட்பாளராக நின்ருர். வாக்காளர்களிடம் நேராகச் சென்று வாக்குகள் சேர்க்கவேண்டாமா? என்று கூறினல், 'செய்தித்தாளில் அறிவித்தால் போதுமய்யா' என்பார். தேர்தலில் கையாளும் முறைகளும், தந்திரங்களும் அவருக்குத் தெரியாது. தோல்வியைப் பற்றிக் கவலைப்படவு மாட்டார். ஆயினும் அப்பொழுது இடண்டாவது வாக்குகள் அதிகம் பெற்று பெயரெய்தியவர் பேராசிரியராவர்.

இந்தியை எதிர்த்துப் பெருந்டைப் பயணம் புறப்பட வேண்டும் என்ற பேராசிரியரின் அறிக்கை அன்றைய அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. எந்த அரசியல் கட்சியையும் சாராது இப்படியொரு ஊர்வலம் நடத்த முடியாது என்று எத்தனையோ நண்பர்கள் எடுத்துரைத்தும் பேராசிரியர் செவி சாய்க்கவில்லை.

அரசியல்வாதிகளுக்கு அவர்களது தலைவர்களே உயிராவர். அவ்வரசியல்வாதிகளின் நடுவிலேயே அத்தலைவர்களின் 'தமிழ் வாழ்விற்கு எதிர்க்கொள்கை'யைக் கண்டித்து மற்றையோர் மனநோவையும் பொருட்படுத்தாது கண்ணறச் சொல்வார். அதனல் அக்கட்சித் தொண்டர்களின் எரிச்சலுக்குள்ளாகி ஆதரவினை இழப்பார்—அதனைப் பற்றிக் கவலைப்படவு மாட்டார்.

'தமிழ் நாவலர் ஆங்கிலத்தின் காவலராகிவிட்டார்' எனப் பேசியதால் தான் கிடைக்க வேண்டிய நற்கனிகள் பல அவருக்குக் கிட்டாதுபோயின எனச் சிலர் கூறுவர். அமைச்சரேயாயினும், அவர் கூறியது தவறு எனப்படின் கடிந்துரையாது விடார்.

அவருக்கெனத் தமிழன்பர் பலரும் பத்தாயிரம் வெண் பொற்காசுகள் திரட்டித் தந்த நிதியினைக் குடும்ப வாழ்விற் கெனப் பயன்படுத்தாது 'குறள் நெறி' அச்சகத்திற்கெனச் செலவிட்டார்.

அஞ்சா நெஞ்சர்

நமது பேராசிரியர் அறியாதது அச்சம். 'யாருக்கும் எதற்கும் எப்பொழுதும் அஞ்ச வேண்டியதில்லை, நேர்மை நம் பக்கம் இருப்பின்'. என்பார் அவர் முதல்வராக இருந்த நாளில் இந்துக் கல்லூரியில் பெரும் போராட்டம் ஒன்று நடைபெற் றது; மாணவர்கள் சினந்து சீரிய காலத்தில் மற்றைய ஆசிரியர் எவரும் மாணவரை நெருங்க அஞ்சினர். ஆனால் தம்மலுவலகத்திலிருந்து புறப்பட்டுச் சென்ற பேராசிரியர் சிங்கங்களைக் குகையிலே சந்தித்தார். என்ன நேருமோ என அஞ்சிய மற்றவரின் அச்சத்தையும் போக்கி மாணவர் மனம் ஏற்கும் வகையில் சிக்கலைத் தீர்த்துப் புன்னகையுடன் திரும்பி வந்தார் அவர்.

கூட்டத்தில், யாரேனும் கம்பனிலிருந்தும் பிறவிலக்கியங் களிலிருந்தும் பாடல் பலவற்றை மனப்பாடமாகக் கூறினர் எனில் பிறரைப்போல் பேராசிரியர் வியக்கமாட்டார். இஃதோர் இயந்திர வேலை; ஆய்வுச் செய்திகளையே மதித்திட வேண்டும் என்பார்.

மேடையில், நம் பேராசிரியர் ஆவேசமாகப் பேசமாட் டார்; அடுக்கு மொழி, அழகு நடை கிடையாது; கொள்கைப் பிடிப்புடைய அமைதியான ஆனால் அழகான பேச்சாக அமைந் திருக்கும். அவரது பேச்சில் குழந்தையின் மனம் வெளிப் படும்; உள்ளொன்று புறமொன்று இருக்காது.

வகுப்பில் உட்கார்ந்து கொண்டேதான் பாடம் புகட்டு வார். பாடம் கற்பிப்பதைவிட தமிழ் ஆர்வம் நன்கு ஊட்டு வார். யாப்பருங்கலக் காரிகையை நான்கே வகுப்பில் நடத்து வார்; கேட்டால் பதவுரையும் பொழிப்புரையும் ஆங்குள; அதைப் படிக்க அறிவு வேண்டுவதில்லை; ஆய்வுரை வேண்டு

மாயின் அணுகுங்கள்" என்பார். ஆகவேதான் இவரைவிட நன்றாக வகுப்பு நடத்தும் ஆசிரியரைவிட இவரிடம் ஆயிரக் கணக்கான மாணவர்கள் சென்று மொய்த்தனர்;

ஏற்றம் இறக்கம்

நம் பேராசிரியரின் வாழ்க்கையில் ஒரு வீழ்ச்சியும் அதன் பின்னால் ஒரு பேருயர்ச்சியும் மாறி மாறி வந்திருப்பதை நாம் அறிவோம். ஈரோட்டில் இருந்து வெளிவந்தார்-ஒரு வீழ்ச்சி; விருதுநகர் செந்தில்குமார நாடார் கல்லூரியில் துறைத் தலைவரும் பேராசிரியரானார்-ஓர் உயர்ச்சி; அங்கிருந்து வெளி யேற்றப்பட்டார் – ஒரு வீழ்ச்சி. நாகர்கோயில் இந்துக் கல்லூரியில் முதல்வரானார்–ஒருயர்ச்சி; அங்கிருந்து வெளி யேற்றப்பட்டார்–மதுரை தியாகராசர் கல்லூரியில் தமிழ் முதுகலைப் பேராசிரியர் ஆகிப் பண்டாரகர் பட்டமும் பெற் றார்-ஒருயர்ச்சி-அங்கிருந்து வெளியேற்றப்பட்டார்-ஓர் வீழ்ச்சி; சென்னை மாநிலக் கல்லூரியில் தலைமைத் தமிழ்ப் பேராசிரியர் ஆனார். இவ்வாறு அவரது வாழ்வில் வரும் சிறு வீழ்ச்சிக்குப் பின் மிக உயர்ச்சியே பெற்றார். தன் தகுதியாலும் தமிழாலும் பெற்ற உயர்வே அது.

அவரது நூல்களில் பல இன்றைய ஆராச்சியாளருக்குப் புத்துணர்வினை மேலேற்றும் என்பதில் ஐயமில்லை; ஆனால் அவரது ஆழ்ந்த புலமையிலும் தமிழ் மரபுமீறாத் தொன்மை காட்டும் நெறியிலும், தமிழ்ப் பற்று ஊட்டும் முறையிலும் யாரும் ஐயம்கொள்ள வியலாது.

பெரிய குடும்பமுடையார் ஆதலால் ஒவ்வொரு திங்களும் பொருட் குறை ஏற்படுவது இயற்கையே. யாரிடமும் தம் பொருட்குறையை வெளியிடார். ஆகாறு அளவு இட்டிதா யினும் பேராசிரியர் தம் துணைவியார் வீட்டொலி வெளிக் கேளாது குடும்பம் நடத்தும் பாங்கு போற்றற்குரியதாம். வீட்டுச் சிக்கலை மறந்து, குடும்பத்தினை மறந்து பேராசிரியர் தமிழினையும், தமிழரையும் நினைந்து வாழ்ந்தாரென்றால் அதற்கு அடிப்படைக் காரணியமாய் அமைந்தவர் அம்மையாரே என நன்றியுடன் நினைவுகூர வேண்டும்.

முடிவுரை

தமிழே தன்னுயிர் என வாழ்ந்து சிறந்த பேராசிரியர் இலக்குவனாரின் எண்ணமும் செயலும் தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செய்வதிலே நிறைந்திருந்தன, தமிழ் வாழ்விற்காகத் தன் வாழ்வைத் துறந்தாரேயன்றி பிறரைப்போல் தன்வாழ் விற்காகத் தமிழ்வாழ்வைத் துறந்தாரல்லர். பேராசிரியர் வாழ்வு ஓரிலக்கியம்; அவர் புகழ் ஓங்குக.

"நிலைகலங்கா நெஞ்சம்"

பயிற்றுமொழிப் பெருநடையைத் தொடங்கியிருந் தார் பேராசிரியர்; அதற்கு, நாளும் பொழுதும் வழியும் பிறவும் திட்டமிடப் பெற்றிருந்தன பெருநடை தொடங் கும் நாளுக்கு இருநாள் முன்னே, "தங்களை பெருநடை மேற்கொள்ளாவாறு தடைசெய்து சிறைப்படுத்திவிட வேண்டும் என்பது அரசின் திட்டமென அறிகின்றேன்" என்று தமியேன் பேராசிரியரிடம் கூறினேன். அதற்கு அஞ்சா அடலேறும் பேராசிரியர், "தமிழைக் காப்பதற் குச் சிலர் பலியாக வேண்டும்; அவருள் யான் முதல் ஆளாக முந்துநிற்கின்றேன்; சிறை செல்வது பற்றிச் சிறிதும் கவலையில்லை" என்றார். மலையே உருண்டுவரினும் நிலைகலங்காத நெஞ்சம் பேராசிரியர் உண்டமை என்பதை அவர்தம் கூற்று மெய்ப்பித்தது.

வழங்கியவர்: புலவர் இரா. இளங்குமரன்.

கல்லூரி மாணவர்

இலக்குவனர்

புலவர். சி. இராமசாமி,
ஒற்றைக்கடை.

அண்மையில் காலஞ்சென்ற அறிஞர், பேராசிரியர், டாக்டர். சி. இலக்குவனருடன் நான்காண்டுகள் கல்லூரித் தோழனுய் உடன் பயிலும் ஒரு வகுப்பு மாணவனுய் அமையும் பேறு எனக்குக் கிடைத்தது. எங்களை மாணவராய் ஏற்றுக் கொண்ட கல்லூரி திருவையாற்றிலுள்ள அரசர் கல்லூரியாகும். அதனைச் சரபோசி கல்லூரி என்றும் கூறுவர். அது கல்லூரியாவதற்கு முன்பு கல்யாண மகால் சத்திரம் என வழங்கப்பட்டது. வழிப்போக்கர்களான அந்தணர்கள் அங்கே வந்து தங்கவும் உண்ணவும் உறங்கவும் கூடிய இடமாக இருந்தது அது. அதன் நடைமுறைக்குத் தஞ்சையைப் பிற்காலத்தில் ஆண்ட சரபோசி மன்னன் தேவையான நிலங்களை எழுதி வைத்தானும். அந்த நில வருமானத்தைக் கொண்டு நிர்வாகம் நடைபெற்றிருக்கிறது.

தொடக்கத்தில் வழிப்போக்கர்களாள அந்தணர்கள் வந்து தங்கி உண்டுறங்கிச் செல்லும் சத்திரமாக இருந்த அது பிற்காலத்தில் வடமொழி (சமஸ்கிருத)க் கல்லூரியாக மாற்றப்பட்டது. வடமொழிக் கல்லூரியில் அந்நாளில் நூற்றுக்கு நூறு டெமொழி பயிலும் அந்தண மாணவர்களே சேர்க்கப் பட்டனர். பின்னர் அந்தணரல்லாத மாணவரும் அங்கொருவரும் இங்கொருவருமாகச் சேர்த்துக் கொள்ளப்பெற்றனர்.

அங்கு பயிலும் மாணவர்க்கு இலவச உணவு இருப்பிடம் கிழமைக்கோர் முறை எண்ணெய் முழுக்கு, விளக்கிற்கு மண்ணெண்ணெய், சலவை வெளுப்புப்போன்ற வசதிகள் எல்லாம் செய்து தரப்பெற்றன.

இவ்வாறு பல ஆண்டுகள் அந்தக் கல்லூரியைத் தஞ்சை மாவட்டக் கழகம் நிர்வகித்து வந்தது. அந்தணத் தலைவர்களே மாவட்டக் கழகத் தலைவராய் இருந்த காலம்வரை தமிழ் மொழிக்கோ தமிழ் மாணவர்க்கோ அங்கு இடமில்லாதிருந்து வந்தது. இந்த நிலையைப் பிற்காலத்தில் மாற்றியமைத்த பெருமை சர். ஏ. டி. பன்னீர்ச் செல்வம் அவர்களையும் தமிழவேள் உமாமகேசுவரம் பிள்ளையவர்களையுமே சாரும் அப்பெருந்தலைவர்கள் எடுத்துக்கொண்ட அரிய முயற்சியின் காரணமாக அங்கு தமிழ்க் கல்லூரியும் தொடங்கப்பட்டது. தொடங்கப்பட்ட காலத்தில் தமிழ் படிக்கும் மாணவர்கள் போதிய அளவினர் கிடைக்கவில்லை. இதனால் இவ்விரு தலைவர்களும் ஆங்காங்கே செய்திகள் அனுப்பி "இலவச உணவு உறையுள்போன்ற எல்லா வசதிகளையும் செய்து தருகிறோம் உங்கள் பிள்ளைகளைக் கல்லூரிக்கனுப்புங்கள்" என்ற வேண்டுகோளை விடுத்தனர். இடைவிடாத இந்த முயற்சியின் பயனால் அந்தணரல்லாத மாணவரும் படிப்படியாக வந்து சேரத்தொடங்கினர். தமிழ் மாணவர் சமஸ்கிருத மாணவர்களுக்குத் தனித் தனியே சமையற்கட்டுகளும், உண்ணுமிடங்களும் உறைவிடங்களும் ஒதுக்கப்பட்டன. இவர்களுக்குள் கடுமையான வைதீக ஏற்றத்தாழ்வும் காணப்பட்டன.

1932–ஆம் ஆண்டு சூன் திங்கள் யானும் இலக்குவனார் போன்ற தோழர்களும் வித்வான் பிரிலிமநெறி முதலாண்டிற் சேர்க்கப்பட்டோம். கல்லூரியிற் சேர்ந்த காலத்தில் இலக்குவனாரின் உருவம் மிகமிக இளைத்துக் காணப்பட்டது. ஒடித்து வைத்தாற்போல ஒல்லியான உடம்பு! ஒடுக்குவிழுந்த கன்னங்கள்! குழி விழுந்த கண்கள்! முகத்தில் முந்துறத் தெரியும் வரிசையான பற்கள்! இவ்வாறு பெருங் காற்றடித்தால் கீழே விழுந்துவிடுவாரோ! என்று ஐயுறும்படியாக அவர் காணப்பட்டார். "உருவு கண்டு எள்ளாமை வேண்டும்" என்று வள்ளுவப் பெருந்தகையாரின் வாய்மொழிக்கேற்ப இலக்குவனார் மற்றமாணவர்கள் மதிக்கும்படியாக அவர்களிடம் பரிவோடும் பண்போடும் பழகிவந்தார். உடல் இளைத்துக்

காணப்பட்டாலும் உள்ளம் வயிரம் பாய்ந்ததாக இருந்தது. தான் கண்ட உண்மையை நிலைநாட்டியே தீருவதென்ற உறுதி யிருந்தது. தான் ஒரு தமிழ் மகன் என்ற தன்மான உணர்வு தலைதூக்கியிருந்தது. இதயத்தில் எண்ணிய கருத்தை எவருக் கும் அஞ்சாது எடுத்துரைக்கும் ஏற்றம் இருந்தது. அநீதியைக் காணும்போது அறப் போராட்டத்தால் அதைக் களையும் ஆண்மையிருந்தது. இத்தகைய இலக்குவனாரிடம் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர்கள் யாவரும் தனி மதிப்புக் காட்டி வந்த னர். அவருடைய கல்வியாற்றலைக் கண்டும் ஆய்ந்துரைக்கும் நுண்மாண் நுழைபுலத்தைக் கண்டும் நீடிய நினைவாற்றலைக் கண்டும் வகுப்பில் முதல் மாணவராய் இலங்கியதைக் கண்டும் ஆசிரியர் மாணவர் அனைவருமே இலக்குவனாரைப் போற்றத் தொடங்கினர்.

அப்போது கல்லூரி முதல்வராக இருந்தவர் டாக்டர் பி. எஸ் சுப்பிரமணிய சாஸ்திரியார் M. A. P, H. D. ஆவர். அவர் தமிழிலும், வடமொழியிலும், ஆங்கிலத்திலும் சிறந்த புலமையாளர். ஆராய்ச்சி வல்லுநர்.

எங்களுக்குத் தொல்காப்பியச் சொல்லதிகாரத்தைப் பாடம் நடத்தத் தொடங்கினர். பாடம் நடக்கும்போதெல் லாம் இடையிடையே எழுந்து ஐய வினாக்களை விடுப்பதில் முந்துற நின்றவர் இலக்குவனார்தாம். வினாவிற்கேற்ற விடை கள் கிடைக்காவிட்டால் இலக்குவனார் எளிதில் விடமாட்டார். சிலசமயம் கல்லூரி முதல்வர் சரியான விடை சொல்லமுடி யாமல் திணறி மழுப்பி வகுப்பை முடிப்பதும் உண்டு. முதல்வர் பாடம்நடத்தும்போது வடமொழி ஏற்றத்தையும் அம்மொழிப் புலவர் மாண்பையும் வடமொழி இலக்கண இலக்கியச் சிறப் புக்களையுமே பெரிதும் போற்றிக் கூறுவது வழக்கம். இது இலக்குவனாருக்குச் சிறிதும் பிடிப்பதில்லை. இடையே இடையே தொல்காப்பியப் பழந்தமிழாசிரியர்களின் உரை

களையும் மறுத்து வடமொழிக் கருத்தைத் திணிப்பது மேலும் எரிச்சலை ஏற்படுத்துவதாயிருக்கும். ஏனைய மாணவர்கள் முதல்வரின் போக்கைப் பொறுத்துக்கொண்டாலும் தன்மான இயக்கத்தில் மிகமிகப் பற்றுக்கொண்ட இலக்குவனாருக்குப் பொறுக்க முடிவதில்லை. அஞ்சாமல் எதிர்த்து நின்று தடை விடைகளால் முதல்வருடன் மோதுவார். அன்று ஐந்து இலக்கணச் சூத்திரங்களாவது நடத்தவேண்டும் என்று திட்ட மிட்டுவந்த முதல்வர் அரைச் சூத்திரங்கூட நடத்தமுடியாத நிலை ஏற்பட்டுவிடும், அவருடைய வகுப்பு மாணவர்களுக்குக் காரசாரமானதாகவே இருக்கும்.

இங்ஙனம் இலக்குவனாரின் துணிவையும் திறனையும் கண்ட கல்லூரி முதல்வர் அவரைத்தான் நேரடியாக எதிர்த்தடக்க இயலாதவராய் ஒருசார் மாணவர்களைக் கொண்டே மோத விட்டு வேடிக்கை பார்க்கத் தொடங்கினர். தமிழ்ப் பகுதியில் பயிலும் மாணவர்களைக் கள்ளர் என்றும் கள்ளரல்லாதவர்கள் எனப் பிரித்து வைத்துக் கலகம் விளைத்துக் கொள்ளும் நிலையையும் உருவாக்கினர், கள்ளர் மாணவர் கட்சியைக் கல்லூரி முதல்வர் மறைமுகமாக ஆதரித்தார். பாதிக்கப் பட்ட கள்ளரல்லாத மாணவர்களுக்குக் கரந்தைக் கவியரசு மறைமுகமாக ஆதரவு காட்டினர். இந்தப் பூசைச்சல் ஆண்டுக் கணக்கில் நீடித்தது. அதுபோது இலக்குவனர் தான் கள்ளருள் ஒரு பிரிவான முக்குலத்தைச் சேர்ந்தவராயிருந்தும் கள்ளரல் லாத மாணவர் பக்கம் உண்மையும் நீதியும் உள்ளதை உணர்ந்து அந்த மாணவர்க்குத் தலைமை தாங்கினர். இதன் மூலம் அன்றே அவர் சாதி இனவெறிகளுக்கு இலக்கானதில்லை என்பது புலப்பட்டது. கல்லூரி முதல்வரின் பிரித்தாளும் சூழ்ச்சியைக் கண்ட அவர் கள்ளரல்லாத மாணவர் கல்லூரித் தலைவரால் மாற்றுந்தாய் மனப்பான்மையுடன் நடத்தப் பட்டதைக் கண்ட அவர் குமுறினர். அவரது இதயக் குமுறல் கல்லூரியிலும் திருவையாற்றிலும் ஒரு புரட்சியை உருவாக் கியது.

தனது நெஞ்சக் குமுறலை வெளிப்படுத்த முக்கியமான மாணவ நண்பர்களைக் கலந்து பேசினர். இறுதியாக முதல்வர்

மீது கண்டனத் துண்டு விளம்பரம் அச்சிட்டு எங்கும் பரப்புவ தென முடிவுசெய்யப்பட்டது'' தகுதியற்ற தலைவரின் கீழ் தமிழ்க் கல்லூரியின் நிலை என்ற தலைப்பில் முதல்வரின் நிர்வாக ஊழல்களை வரிசைப்படுத்தி ஆயிரக்கணக்கில் துணடு விளம்பரம் அச்சிட்டுக் கல்லூரியிலும் தெருக்களிலும் ஒட்டப் பட்டன. பொதுமக்களுக்கும் வழங்கப்பட்டன. இரவோடிர வாக இவ்வேலை நடைபெற்றது. தஞ்சை சென்று அச்சிட்டு வரும் பணி என்னிடம் ஒப்படைக்கப்பட்டது கல்யாண மகால் படித்துறையில் கண்டனக் கூட்டத்திற்கும் ஏற்பாடு செய்யப்பட்டது. கொதித்த மாணவர்கள் இலக்குவனாரின் தலைமையில் குரல் கொடுத்து முதல்வரின் பொருந்தாப் போக்கைக் கண்டித்துத் தீர்மானமும் நிறைவேற்றினர்.

இந்த நிகழ்ச்சி கல்லூரியிலும் நகரிலும் ஓர் பரபரப்பை உண்டாக்கியது. அன்றைய தஞ்சை மாவட்டக் கழகத் தலைவ ரான திரு. நாடிமுத்துப் பிள்ளைக்கும் மாவட்ட ஆட்சித் தலைவ ருக்கும் புகார்கள் பறந்தன. உடனே அவர்கள் கல்லூரி நொக்கி விரைந்தனர், கண்டனம் தெரிவித்த மாணவர்க்குத் தண்டனை வழங்கவேண்டும் என முதல்வரின்சார்பில் வலியுறுத் தப்பட்டது. ஆனால் கரந்தைக் கவியரசு அவர்களின் தலையீட் டால் மாணவர்கள் எவரும் பாதிக்கப்படவில்லை. முதல்வரிடம் குறையுளது என அறிந்த மேலிடத்தினர் ஒப்புக்கு விசாரித்து விட்டுச் சென்றுவிட்டனர் புகைச்சலும் பூசலும் வரவரத் தணியத் தொடங்கின இவவாறு எவர் தவறு செய்யினும் துணிவுடன் எடுத்துக் காட்டி எதிர்க்கும் திறன் அன்றே இலக்குவனாரிடம் இயல்பாக அமைந்திருந்தது. கல்லூரி மாணவ ராக இருந்த காலத்தில் மட்டுமல்ல. அது பிற்காலத்திலும் ஏன் வாழ்வின் இறுதிவரை இந்த நெஞ்சுரம் இருந்தே வந்தது.

வித்துவான் இறுதியாண்டு 1936-இல் அரசினர் தேர்வை எழுதி முடித்தோம். இந்தத் தேர்வில் இலக்குவனார் தாம் மாநில முதல் மாணவராய் மதிப்பெண் பெறுவார். இதற் கான திருப்பனந்தாள் காசிமடத்தின் ஆயிரம் ரூபாய்ப் பரிசை அடைவார் என எல்லோரும் எதிர்பார்த்தனர். ஆனால் முடிவு வேறானது. இவரினும் சில மதிப்பெண்கள் மிகுதியாகப் பெற்ற

பண்டித வித்வான் சங்குப் புலவருக்கு அந்தப் பரிசு கிடைத்தது. அதற்காக இலக்குவனார் கவலைப்படவில்லை. கல்லூரி வாழ்க்கை முடிந்து வெளியேறிய இலக்குவனார் பல கல்வி நிலையங்களில் தமிழ்ப் பேராசிரியராகப் பணி ஆற்றினார். இடையிலே ஆங்கிலத் தகுதியை உயர்த்திக்கொள்ள முயன்று அதில் எம். ஏ. பட்டமும் பெற்றார். அவருடைய வாழ்க்கையில் எத்தனையோ பல சோதனைகளைச் சந்திக்க நேர்ந்தது (குறிப்பாக இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் தலைவர் பெரியார், அறிஞர் அண்ணா இவர்களின் தலைமையை ஏற்றுத் தீவிரமாக இறங்கிச் சிறை புகுந்தார். பின்னர் பல கல்லூரிகளிலும் தலைமைப் பேராசிரியராகவும் முதல்வராகவும் பணியாற்றி வந்தார், பணிபுரிந்த இடங்களிலெல்லாம் தமிழ் மொழியாக்கக் கழகங்களை நிறுவினார். பல மொழிவளர்ச்சி மாநாடுகளை நடத்தினர், பல நூல்களை எழுதினார். சில பத்திரிகைகளையும் ஆசிரியராகவிருந்து நடத்தி வந்தார். இறுதியாகத், தொல்காப்பியத்தை அரிதின் முயன்று ஆங்கிலத்தில் மொழிபெயர்த்ததன் மூலம் பி. எச். டி. டாக்டர் (பண்டாரகர்) பட்டமும் பெற்றார், இவர் தம் ஆற்றலை அண்ணாவே வியந்து பாராட்டினார் என்றால் வேறு என்ன சொல்ல வேண்டியிருக்கிறது?

மேதை இலக்குவனாரிடம் அறிவிருந்தது; ஆராய்ச்சியிருந்தது. ஆற்றல் இருந்தது, எழுத்து வன்மை, பேச்சு வன்மைகள் இருந்தன. இவை எல்லாமிருந்தும் அவரிடம் ஒன்றே ஒன்று இல்லாமல் இருந்தது. அதுதான் பிறரைக் காக்காய் (கால் கை) பிடிக்கும் தன்மை. இச்சகம் பேசும் குணம். பிறருக்குத் தலையாட்டும் தன்மை இலக்குவனாரிடம் இருந்திருந்தால் அவர் இன்னும் மேலான பதவிகளை ஏற்றிருப்பார். தமிழுக்கும் தமிழினத்திற்கும் தமிழ்க் கலைகட்கும் யாரால் இழிவு நேர்ந்தாலும் அவர்களை எதிர்த்துப் போராடும் தன்மானமும் "நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே' எனக் காட்டும் நக்கீரத்தனமும் இருந்ததால்தான்

இலக்குவனர் வாழ்க்கையில் உயரமுடியவில்லை. என்றாலும் என்ன? அவர் சிறந்த தமிழ் மறவர். தமிழ் காத்த தளபதி. ஆயிரக்கணக்கான தமிழ் மாணவர்களின் நெஞ்சங்களில் தன்மானத் தமிழ் எழுச்சியை யுண்டாக்கிய பேராசிரியர் என்பதை எவரும் மறுக்கமுடியாது.

அவர் புகழ் வாழ்க !
அவர்தம் கொள்கை வெல்க.

...※...

பாவலன் உயிர்ப்பு

ஒரு பாவலனின் உயிர்ப்பான கொள்கை அவன் எடுத்துக்கொண்டு பாடப்புகுந்த செய்தியுள் அடங்கி விடுவதில்லை. எடுத்துக்கொண்ட பொருளுக்கு எவரும் எதிர்பாராமல் எங்கிருந்தோ கொண்டு வந்து நிறுத்தும் உவமை முதலியவற்றால் அவன் உயிர்ப்பான உணர்வு புலப்படும்.

பாவேந்தர் இயற்கை எழிலை 'அழகின் சிரிப்பு' என்னும் பெயரால் பாடுதற்கு எடுத்துக்கொண்டார். விண்மீனைப் பாடும்போது ஓர் உவமை காட்டுகிறார் :

" மண்மீதில் உழைப்போ ரெல்லாம்
வறியராம் ; உரிமை கேட்டால்
புண்மீதில் அம்பு பாய்ச்சும்
புலையரே செல் வராமி தைத்தன்
கண்மீதில் பகலில் எல்லாம்
கண்டுகண் டந்திக் குப்பின்
விண்மீனாய்க் கொப்ப ளித்த
விரிவானம் பாராய் தம்பி "

என்று கூறுவதில் இருந்து உழைப்பாளர் படும் துயரும், செல்வர் செய்யும் கேடும் பாவேந்தர் நெஞ்சத்தை வாட்டிய தன்மை தெள்ளிதிற் புலப்படும்.

புரட்சியாளர்
இலக்குவனர்

வீ. முத்துச்சாமி, எம். ஏ.,

தமிழ்த் தாயின் 'நெடுந்தகை மைந்தருள்' தன்மானமும், தமிழ்காக்கும் தனிமறமும், கொள்கைக் கடைப்பிடியும், ஒண்டமிழ்க்காக உயிர் துறக்கும் உயிர்க் கொடையுணர்வும் 'தமிழால் வாழ்பவர் தமிழுக்காகவும் வாழ்தல் கடன்' எனுந் தமிழ்வாழ்வு நெறியும், இன்றமிழின் ஏற்றத்திற்காக இன்னலை இன்முகத்தோடு ஏற்கும் தொண்டுள்ளமும், ஒருங்கே அமையப் பெற்ற பெருமைந்தர்; இவ்விருபதாம் நூற்றுண்டின் இவ்விடைக் காலத்தில் இலங்கிய ஒருமைந்தர், வரலாற்றில் முகிழ்க்கவொண்ணு அருமைந்தர், அன்னைத் தமிழ்த்தாயின் மைந்தர்,என்றன் வழிபடு தெய்வப் பெற்றிமிகு பேராசான், பெரும்புலவர், நற்றமிழ் நாவலர், நாடுபுகழ் பாவலர் இலக்குவர் எனின் முற்றிலும் ஒக்கும்.

'இலக்குவன் கலக்குவன்' என மொழிந்திட்டார் 'என்றுமுள தென்றமிழ்' எனச் சுட்டிய கன்னித் தமிழ்க் கவியரசர் கம்பர். 'அக் கவிவேந்தின் நெடுமொழி நிலைமொழியாக வேண்டும்; அதற்காக நெடும்படையும் திரட்டவேண்டும்; அப் படையின் முதற்றலைவனாக முன்னின்று முனைப்புடன் மொழிப் போர் உடற்றவேண்டும்;' எனுங் கருத்தால், தமிழ்ப் பகைவரின் நெஞ்சினைத் தம் எழுத்தால், உரையால், அறப்போர் நெறியால், ஆற்றல்மிகு செயற்றிறத்தால், நாளும் கலக்கினர்; நற்றமிழ்த் தீமை விலக்கினர்; தூயதமிழ்ப் பற்றுடை இளைஞரைத் துலக்கினர்; இவ் இலக்குவர் எனின் சாலவும் பொருந்தும்.

'அவன் ஒருவன் உளான் எனில்' எனும் சங்கத் தமிழ் நெறி முறைப்படி இலக்குவர் உளார் எனின் தமிழ்ப்பகை சரியும்; தமிழ்க்கேடு உடையும்; மொழிக்கொலை அழியும்; தாய் மொழிப் பழிப்பு ஒழியும்; தாய்மொழியைத் தாக்கவரும் எம்மொழியும் தரைமட்டமாகும், இத்தமிழ்க் காவலர் இருக்குமிடமெல்லாம் மொழிப்பற்று முகிழ்க்கும்; மொழிக் காப்பு மணக்கும்; தனித்தமிழ் உணர்வு வீறுகொண்டெழும்; எழுச்சிமிகு புரட்சியுணர்வு புலரும்; மலரும்; புத்தொளியூட்டி நிற்கும்; புத்துலகுகாட்டி நிற்கும்; இப்பேரொளி ஊடுருவும் எவ்வுள்ளமும் தமிழ் உள்ளமாக உருவெடுக்கும்.

இப்பெருந்தகையின் உள்ளம் புரட்சியுள்ளம்; அதனின்று உருவெடுக்கும் அவர்தம் எண்ணம் புரட்சி எண்ணம்; அவ்வெண் ணம் எழுப்பும் அவர்தம் கருத்து புரட்சிக் கருத்து; அக்கருத் துக் கனியும் அவர்தம் எழுத்து புரட்சி எழுத்து; அவ்வெழுத்து இயம்பும். அவர்தம் உரை புட்ரசியுரை; அவ்வுரைகாக்க அவர் நாடும் செயல் புரட்சிச் செயல்; அச்செயல் உருவாக்கும் உலகு புரட்சியுலகு; பொன்றுத் தமிழ் உலகு!

அனைத்துலக வரலாற்றை ஆய்ந்து நோக்கின் புரட்சியா ளர் அருகியபான்மையில் புலப்படுவர் என்பது தேற்றம். மருட்சியற்ற புரட்சி இயக்கம் காணுகின்ற அஞ்சா நெஞ்சப் போர்ச் செம்மல்கள் பெருமளவில் தோன்றுவது அரிதினும் அரிதேயாம். உழைப்பவர்க்கு உரிமையீட்டிய தொழிற் புரட்சி யும், மன்பதையின் அடிப்படையையே மடமையில் ஆழ்த்திய மடிமைமிகு மூடக்கொள்கைகளை முறியடித்த சீர்திருத்தப் பெரும் புரட்சியும், உலகுகண்ட புரட்சிகளாகும். துருக்கியைத் திருத்திய கமால்பாட்சாவும், இத்தாலி நாட்டினில் செம்மை வித்திட்ட மாசினியும், கரிபால்டியும், பிரஞ்சு நாட்டினில் மக்கள் அமைப்பினையே மாற்றியமைத்த உரூசோவும், வால்டே ரும், உருசிய நாட்டில் பொதுவுடைமை மன்பதையை உருவாக்கிய இலெனினும், சீனாவின் சீர்திருத்தத் தந்தையா கிய சன்யாட்சேனும், இங்கிலாந்தில் புரட்சி வித்தூன்றிய

கிராம்வெல்லும், வங்கத்தின் புரட்சிச் சிங்கம் நேதாசியும், இன்றமிழ்நாட்டின் செந்தமிழ் வீரச் செம்மல் செக்கிழுத்த சிதம்பரனாரும், உலக வரலாற்றில் குறிப்பிடத்தக்க புரட்சியாளர்கள் எனலாம். இத்தகைய உலகப் பெரும் புரட்சியாளர் இலக்குவர்.

மன்பதையின் செம்மையினைக் குலைக்கும் குலப்பாகுபாடு ஒழிதல் வேண்டும்; 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' எனுங் கொள்கை உருவாகி வளர்தல் வேண்டும்; என்பதில் இப்பெரியார் அசைவிலா நம்பிக்கைகொண்டவர்; அதற்கு வழி கலப்பு மணம் என்று கண்டவர்; அதனைத் தம் வாழ்வில் செயற்படுத்தி நின்றவர். இன்று கலப்பு மணம் என்று பேசுவதே பெருமையாகப்படுகிறது. ஆனால் நாற்பது ஆண்டுகட்கு முன்னர், சாதிவேற்றுமை தலைவிரித்தோங்கிநின்ற அற்றை நாளில், சாதி இல்லை என்று கரைபவன்பாற் கடுமொழியும், பழிச்சொல்லும், இழிக்கூற்றும், பகைப் பார்வையும், பாய்ச்சுகின்ற பாழ்ச்சூழலில் பரவி விரவிநின்ற அற்றைப் போழ்தில், இத்தமிழ்ப் பேராசிரியர் கலப்புமணம் புரிந்திட்டார்; சீர்திருத்தச் செம்மலாய், மன்பதையில் எதிர் நீச்சலடிக்கும் வீரராய் விளங்கிட்டார். கடும் புரட்சி வாழ்வை மேற்கொண்டார்; நீடுதுயில் நீக்கவந்த நெடியோனாய் நின்றிட்டார்; அவர் தம் நிமிர்நிலைதான் என்னே! என்னே!!

உலக வரலாற்றில் நாட்டுரிமை வேட்கையில் வாழ்விழந்தோரைக் காணுகின்றோம்; நல்லுழைப்பாளி யுரிமைக்காக நலமிழந்தோரைக் காணுகின்றோம்; விடுதலைக் கிளர்ச்சிக்குத் தம்மை ஒப்படைத்தோரைக் காணுகின்றோம் ஆனால், மொழியுரிமைக்காகத் தம் வாழ்வை ஒப்படைத்த செம்மல்களை காண இயலவில்லை. இஞ்ஞான்று, அச்செம்மல், இச்செந்தமிழ் இலக்குவச் செம்மல் எனக் காண்கின்றோம். உலகில் உரிமைப் புரட்சியுண்டு; உழைப்பாளிப் புரட்சியுண்டு; விடுதலைப் புரட்சியுண்டு; மொழிப்புரட்சி யாண்டும் இல்லை; யாரிடத்துமில்லை.

ஆனால் அப்புரட்சி, பைந்தமிழ்ப் பெரும் புரட்சி, இப்பெருந் தகையார் மாட்டு உண்டு.

தமிழ்க்குரிசில் இலக்குவனார் தமிழ் வாழ்வு நாடியவர்; 'தமிழ்த்தெருவில் தமிழ்தான் இல்லை' எனுந் தாழ்நிலைபோக்க முனைந்தவர், தாங்கொணாப் பெருந்துயரும் ஏற்றவர்; தமிழ் உரிமை நாடுகின்ற, தனித்தமிழ் பேணுகின்ற, தமிழ்உணர்ச்சி யூட்டுகின்ற தமிழேடு தமிழ்நாட்டில் உலவல் வேண்டுமென்ப தில் தணியாத வேட்கைகொண்டவர் தமிழர்தம் பேச்சிலும், எழுத்திலும், வாழ்விலும் தமிழ் காக்கப்பட வேண்டும் என்ப தற்காகவே 'ஒண்தீந் தமிழாய்ந்த கூடல்' மாநகரில் தமிழ்க் காப்புக் கழகம் கண்டவர். 'குறள்நெறி யோங்கின் குடியரசோங்கும்' என நாளும் நவின்றவர்; நற்றமிழ்க் 'குறள்நெறி' ஏடும் நடத்தியவர். தொல் தமிழ் இலக்கணமாம் தொல்காப்பிய நெறியையும், குவலயப் பெருநூலாம் குறள்வழியையும் குன்றாது பரப்பியவர்.

இந்தி முதன்மை தமிழுக்குக் கேடு; தமிழர்தம் வாழ்வுக்கு நஞ்சு; தமிழின் அழிவுக்கு வழி; தமிழ்நாட்டின் மறைவுக்குச் சின்னம். ஆகவே எந் தமிழ்நாடே எழுந்து பொங்கிடு; 'எதிர்ப்புச் செய்திடு; செயற்படு; செந்தமிழைக் காத்திடு' என்றெழுந்து 1949 ஆம் ஆண்டில் தமிழக இந்தி எதிர்ப்பு மாணவர் மாநாட்டில் தலைமை ஏற்ற நாளினின்று தம் வாழ்நாள் முழுதும் முழங்கிவந்தவர். மொழிக்காப்புப் போரில் முனைந்து நின்றவர். மக்களாட்சியின் அடிப்படை உரிமைகளாகிய எழுத்துரிமையைப் பேச்சுரிமையைப் பயன்படுத்தி இந்தி எதிர்ப்புக் கருத்துக்களை எழுதியதால், பேசியதால் இப்பேராசிரியர், 1965 ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் தமிழகத்தில் பொங்கியெழுந்த மொழியுரிமைக் கிளர்ச்சியின்போது சிறை செய்யப்பட்டார். செந்தமிழ்க் காப்புதந்த சிறை வாழ்வை நெஞ்சக் களிப்போடு ஏற்றார். இவர் தம்நிமிர் நிலை தான் என்னே! என்னே!!

வண்டமிழ்க்கு வாழ்வு தேடியதால் கிடைத்திட்ட பரிசு வேலூர்ச் சிறை வாழ்வு, வேலை இழப்பு; வேதனைமிக்க வாழ்வு. கறைபடிந்த அறம்நலிந்த இற்றைய நாளில் கன்னித் தமிழ்க் காவலர்க்கு இக்கடு வாழ்வு கிடைத்திடுவது இயற்கை! இயற்கை!! நெஞ்சு நெகிழ் இச்செய்தி நம் தாயகநீள் வரலாற்றில் நிலைத்து நிற்கும் என்பது உண்மை! உணமை!!

உசுமானியப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவராகத் திகழ்ந்த ஞான்று "இத்தெலுங்குநாடு, பண்டைத் தமிழ்நாடு; இங்கு வாழுகின்ற தமிழ்மக்கள் தம் பண்டைய உரிமையும் கிழமையும் கிடைக்கப்பெறக் கிளர்ந்தெழுந்து ஒல்லும் வகை செயலாற்றவேண்டும்" என்னும் உரிமையொளி பொதுளிய கருத்தினைக் கலக்கம் சிறிதுமின்றி வெளியிட்டார். கன்னித்தமிழ்க் காவலராய் விளங்கிட்டார்,

தாய்நாடு திரும்பினார்; நாஞ்சில் நாட்டில் நற்கல்லூரித் தலைமை ஏற்றார். உரிய அகவையில் ஓய்வுபெற்றார். ஆனால் ஒண் தமிழ்ப்பணியில், ஓயா மொழிப் போரில் தம்மை ஒப்படைத்தார். ஆட்சியின் அறக்குறைபாட்டை, நேர்மையின் திரிநிலையினை, மொழிகாப்பதில் முனைந்து நிற்காத் தன்மையினைத் தமிழகத்தின் மூலைமுடுக்கெல்லாம் முழங்கினார்.

இன்றமிழ்ப் பெரும்புலவர் இலக்குவப் பெருந்தகை நம் அன்னை மொழி காத்த அடலேறு; அஞ்சாநெஞ்சுடை அருந்தமிழ்க் குரிசில்; கொள்கைக் குன்று; நேர்மையின் நிலைக்களன்; புரட்சியின் உலைக்களன். அவர் உயிர் தமிழ்; அது காக்க அவர் நாடியது அறப்புரட்சி; அப்புரட்சி ஓங்கட்டும்! ஓங்கொலி ஞாலம் வீங்கட்டும்!! ஒண்டமிழோசை விண் முகட்டை எட்டட்டும்!!!

வெல்க தமிழ்! வாழ்க என் தமிழ்த்தெய்வம்!!

இலக்குவனால் தான் முடியும்

பாவேந்தர் பாரதிதாசனார் மதுரைமாநகர்க்கு வந்து பாரதி புத்தகநிலைய உரிமையாளர் திருமிகு சோ. சாமிநாதன் அவர்கள் திருமனையில் தங்கியிருந்தார். தமிழ்க் காப்புக் கழகச் சார்பில் அவரைப் பார்க்கச் சென்றிருந்தோம். காப்புக் கழகத்தின் கோட்பாடுகள், செயல் திட்டம் ஆகியன பற்றி உரைத்தோம். அதன் தலைவர் பேராசிரியர் இலக்குவனார் என்பதையும் சுட்டினோம். அப்பொழுது பாவேந்தர் அவர்கள் நெஞ்சார்ந்த உணர்வுடன் "தமிழைக் காக்க இலக்குவன் ஒருவனால் தான் முடியும்; வாழ்வையே தமிழுக்கு ஆக்கிக் கொண்டவன் அவன்; அவன் முயற்சிக்கு என் வாழ்த்து; எப்பொழுதும் என்பங்கைச் செய்ய நான் காத்திருக்கிறேன்" என்று வாழ்த்தினார்.

"புலமிக் கவரை புலமை தெரிதல்
புலமிக் கவர்க்கே புலனாம்"

வழங்கியவர் : புலவர் இரா. இளங்குமரன்.

"அடுக்கிய கோடித் துன்பத்திற்கு ஆட்படினும் அதனால் உள்ளஞ் சோர்வடையாத தமிழ் மறவர்" கொள்கைப் பிடிப்பும், உள்ளத்துணிவும் இவர் வாழ்வில் ஈந்த இடுக்கண்கள் பல. அவையனைத்தையும் தம்மொழித் தொண்டாம் வயலுக்கு உரமாக்கி அதனால் உரம்பெற்று உழைக்கும் ஒரு பெருங் குரிசில் பேராசிரியர் இலக்குவனார்"

டாக்டர். மே. சுந்தரம் (9—1—66)

இருட்படலம் விலக்குவராக இலங்கும் இலக்குவனார் அவர்கள், இடைக்காலத்துத் தொல்காப்பியப் பயிற்சி குன்றியிருந்தாற் போல் இன்றிருந்தாலும், அழியாது தொல்காப்பியம் வாழ்வது போல என்றும் நின்று நெடிது வாழ்க. அவர் மொழித் தொண்டு வாழ்க.

பேராசிரியர் வீ. ப. கா. சுந்தரம், எம்.ஏ., (9—1—66)

எதிர் நீச்சலில் எரிகதிர் நித்திலம்

பண்டித-வித்துவான்.
கி. பொன்னுராமன்

ஆயிரத்துத்தொள்ளாயிரத்து எழுபத்து மூன்றும்யாண்டு தமிழ்நாட்டிற்கு தாங்கவொண்ணு மும்பெரும் பேரிழப்பினை நல்கியுள்ளது. முதற் பேரிழப்பு அகன்ற அறிவும் ஆழ்ந்த நுண்ணறிவும் பெற்றிலங்கிய பேராசிரியர் டாக்டர் திரு. இலக்குவனுரைத் தமிழகம் இழந்ததாகும். பிறிதோர் 'பேரிழப்பு—தமிழர் மானங்காத்த சீர்திருத்தச் செம்மல் தமிழர் தலைவராம் பெரியார் ஈ. வே. இராமசாமி அவர்களை இழந்ததாகும் மற்றுமோர் பேரிழப்பு, அறிவியலறிஞர் ஜி. டி நாயுடு அவர்களை இழந்ததாகும். இம்முப்பெரு இழப்புக்களும் தமிழ் மக்களை வெகுவாகப் பாதித்துள்ளன என்பதை எவரும் மறுப்பதற்கிலர். மேற்கூறிய முத்தரப்பினரும் தமிழ் மக்களுக்கு ஒல்லும் வழியிலெல்லாம் ஈடு இணையற்ற தொண்டினைப் புரிந்தவர்களாவர். அன்றியும் இம்மூவரிடையே ஒருவர்பால் ஒருவருக்கு நீங்கா அன்பும் இருக்கக் கண்டவர்கள் தமிழ் மக்கள். பெரியார் ஈ. வே. இராமசாமியினுடைய தன்மானப் பரப்புரையைப் பெரும்பள்ளியில் படிக்கின்ற போழ்தே அண்ணல் இலக்குவனுர் அவர்கள் செவிமடுத்து மனத்தைத் தன்மான இயக்கத்தில் ஆட்படுத்திக் கொண்டவராவார். ஐயாற்றுத் தமிழ்க் கல்லூரியில் கற்கின்ற காலத்து ஐயாவின் பகுத்தறிவுக் கருத்துக்களைப் பல்லோரிடத்தும் எடுத்துக்கூறி வாதிட்ட ஞான்று விந்தையான விபரீதமான இடுக்கண்களுக்கு உட்பட்டார் என்பதை அவர் தம் நூலாகிய "என் வாழ்க்கைப் போர்" என்ற நூல் நமக்கு எடுத்துப் பகருகின்றது. அதேபோன்று அறிவியலறிஞர். ஜி. டி நாயுடு அவர்

களுடைய பெறுதற்கரிய தொழில் நுட்பங்களையும், போற்று தற்கரிய அறிவிய கூற்றுபாடுகளையும், வியந்து பாராட்டிய தோடன்றி, அன்னாரைப் பாராளுமன்றத் தொகுதித் தேர்த லில் முழுமூச்சாக ஆதரித்து நமது பேராசிரியர் ஒப்பற்ற பல பரப்புரைகளையும் நிகழ்த்தினர். அதன் விளைவு விருதைக் கல்லூரியிலிருந்து கைமேற்கண்ட பலனாக வேலை இழப்பை உருவாக்கினர். இவ்வாறு அறிவியலறிஞருக்கும் தன்மானத் தந்தைக்கும் தன்னேரில்லாத் தமிழ் மலைக்கும் நெருங்கிய தொடர்பிருந்ததை எண்ணி இறும்பூதெய்த வேண்டியவர் களாயுள்ளோம்.

என்றும் "சான்றோர் சான்றோர் பாலராப; சாலார் சாலார் பாலராகுபவே" என்பது புறநானூற்றின் தத்துவ மன்றோ?

"கற்றதனாலாய பயனாவது" அதனை மற்றவருக்கு அளித் தலே என்பதை உணர்ந்த பேராசிரியர் ஐயா அவர்கள் நாளும் தமிழ் பரப்புத் தக்கதோர் தொழிலாம். தமிழாசிரியர் பணி யைத் திருவாரூரிலும், திருவையாற்றிலும் ஏற்று, "பல் கேள்வித்துறை போகிய தொல்லாணை நல்லாசிரியர்" வரிசையில் வைத்து எண்ணத்தக்க இலக்கு நூலறிவோடு உலகியலறிவும் சாலப்படைத்துத் தோலா நாவின் மேலோராய் விளங்கினர். புலவரது வாழ்க்கை வஞ்சங்கலவாப் புனித முடையது. தண்ணார் தமிழ்மொழியில் ஓங்கிய புலமைபெற் றிருந்த அன்னார் உலக மொழியாம் ஆங்கிலத்தை வருந்திக் கற்றதன் மூலம் திப்பிய புலமையைப் பெற்றார். கற்றோர் அறியா—அறிவினராயும், கற்றோர்க்குத் தாம் வரம்பாகிய தலைமையராயும், விளங்கி விண்ட கருத்துக்கள் பலப்பல. "குணமென்னும் குன்றேறி நின்ற" அப்பெருந்தகை, கொண்ட குறிக்கோளில் எத்துணையும் மாற்றமல்லாது "வங்கினைப் பற்றிப் போகாவல்லுடும் பென்ன" வாழ்ந்து காட்டியவராவர். அவ்வாறு கொண்ட கொள்கையில் உறுதியாக அன்னார் இருந்

தைத வளைந்து நெளிந்து போகத் தெரியாத வன்கணாளர், என்று கூடக் குறைகூறிச் சாடியவர்களும் உண்டு. அத்தகைய சான்றோர்கள் மேடையில் முழங்குகின்றபோழ்து" ஊழி பெயரினும் தாம் பெயரார் சான்றாண்மைக்கு ஆழி எனப்படுவார்," என்ற குறள் நெறியை ஓங்கிய குரலிற் கூறிப் பெருமைப்படத் தயங்கியதில்லை. குறள் நெறிப்படி வாழ்ந்தவரைக் குறைகூறிய உள்ளங்கள் உலக மக்களுக்குக் குறுகத்தரித்த குறளின் மேம்பாட்டினை எடுத்தோதுவதற்கு நாளும் விழைகின்றன என்பது வெள்ளிடை மலையாம்.

அறநெறி பிறழாத உள்ளமும், அஞ்சாத நெஞ்சுரமும் கொண்ட அண்ணலார் விருதைக் கல்லூரியிலிருந்து பணியிழப்புப் பெற்றபின்னர் பெரியாருடைய தன்மானக் கருத்துக்களையும், பகுத்தறிவின் ஆற்றலையும் வாய்ப்புக் கிடைத்த போழ்தெல்லாம் முழக்கமிட முற்பட்டார். "சாத்திரம் பல பேசும் சழக்கர்காள், கோத்திரமும் குலமும் கொண்டு என் செய்வீர்" என ஆதியில் இல்லாச் சாதியினையும் மூடப் பழக்கங்களையும் சாடாத நாளில்லை. ஓர் உருவம் ஒரு நாமம் இல்லாத இறைவனுக்கு உலகம் ஆயிரம் உருவங்கள் கற்பித்து ஆயிரம் நாமங்கள் சூட்டி வழிபடுவதைக் கண்டித்தார். அதே போழ்து திரு. வி. க. அவர்களின் கருத்திற்கேற்ப இயற்கையின் எழிலார்ந்த முருகே இறைவன் என்பதையும், அன்னார் மறுத்தாரில்லை. இவ்வாறு சமுதாயச் சீர்திருத்தத்தையும், நேரிய இறைவழிபாட்டினையும் எடுத்துரைத்ததினால் அன்னாரை நாத்திகர் என்றே பலரும் நினைத்துப் பிற கல்வி நிலையங்களில் பேராசிரியர் பணி நல்க மறுத்தனர். வெந்தழலிற்பட்ட பூங்கொடிபோலப் புலவரின் குடும்பம் சோர்ந்து தளர்ந்து துன்புறலாயிற்று. கலைக்கடல் கடந்தும் கலிக் கடலைக்கடக்க வொண்ணாப் புலவரின் நெஞ்சம் குமுறியது. "இல்லாமை என்கின்ற ஒரு பாவி" இலக்கணச் செம்மலை இறுகப் பற்றிக் கொண்டான். எதையும் தாங்கும் இதயம்பெற்ற எரிகதிர் நித்திலமாம் புலவரேறு அவர்கள் தமிழ்த்துறையைவிட்டு

வேற்றுத்துறையை நாடமுற்பட்ட போழ்துதான், கலைத்தந்தை கருமுத்து தியாகராசர் அழைப்பு அன்னாருக்குக் கிடைக்கப் பெற்றது. "தமிழ் நிலைபெற்ற தாங்கரு மரபினையுடைய மாடமலி கூடல் மாநகரிற்கு வருகை புரிந்தார் தியாகராசர் கலைக்கல்லூரியிற் பேராசிரியர் பொறுப்பேற்று "இருந்தமிழே உன்னாலிருந்தேன் இமையோர் விருந்தமிழ்தம்" என்றாலும் வேண்டேன் என முழங்கினார். தனித்தமிழ் காக்கத் தமிழ்க் காப்புக் கழகம் நிறுவித்ததை சால்புலவர்களையெல்லாம் அழைப்தார். "பத்துப்பாட்டாதி மனம் பற்றினார் பற்றுவரோ எத்துணையும் பொருட் கிசையும் இலக்கணமில் கற்பனையே என்ற பேராசிரியர் சுந்தரம்பிள்ளையினுடைய தமிழ்க்குரலைப் புலவர் குழாத்தினின் எடுத்து வைத்துச் சிந்திக்கச் செய்தார் கனிந்த நெஞ்சங் கொண்ட நமது பேராசிரியர் மெய்வருத்தம் பாராது கண்துஞ்சாது ஒழுகாப் புகழ் தொல்காப்பியத்தை உலகமொழியாம் ஆங்கிலத்தில் உருப்பெறச் செய்ய முயன்றார். முயற்சியில் வெற்றியும் பெற்றுப் பண்டாரகர் பட்டத்தையும் புலவர் குழாம் போற்றும் வண்ணம் பெற்றார். ஐயா அவர்கள் தம் வாழ்நாளில் தமிழ்த் தொண்டும் சமுதாயச் சீர்திருத்தத் தொண்டும் தமிழகத்தின் பல்வேறு இடங்களில் புரிந்திருந்தாலும்" "தென் தமிழ் நன்நாட்டுத்தீதுதீர் மதுரையிலே" தான் மேற்கூறிய அவ்விருவகைத் தொண்டுகளும் ஓங்கிநின்றன என்று கூறுதல் மிகையன்று. உயர்மதில் கூடலில் ஆய்ந்த "ஒண்தீந்தமிழை ஓர்ந்து உணர்ந்து கற்ற நமது செந்நாப் புலவரைத் திருவள்ளுவர் கழகத்தார் தொல்காப்பியத் தொடர் சொற்பொழிவு நிகழ்த்து மாறு வேண்டினர். ஐயா அவர்களும் நன்பாட்டுப் புலவராகக் கழகமேறி அரிய ஆராய்ச்சிச் சொற்பொழிவுகளைப் பன்னாட்கள் நல்கினார் அது போழ்து இலக்குவனாருடைய ஆராய்ச்சித்திறன் பல்லோராலும் போற்றிப் புகழப்பட்டது. 'தமிழ்கெழுகூடலில்' கொண்டாடப் பெற்ற பொங்கல் விழாக்களிலெல்லாம் ஐயா அவர்களுடைய தமிழ் மணமும் சீர்திருத்த மணமும் பொங்கிப் பொலிவுற்றன. அற்றைய நாளில் திருமணம் செய்து கொண்ட

தமிழ்ப் பற்றுளர்களில் பெரும்பாலோர் அண்ணலார் அவர்களின் தலைமையில்தான் தமிழ்த் திருமணம் செய்து கொண்டனர் என்பதை பழுதில் கொள்கை வழுதியர் நகர் அறியுமன்றோ! வழுமலித்து முடிவு ஒவ்வாக்கீழ் மக்கள் கொச்சைக் குழறலை மொழிநலம் பெறுவோர் நல்ல தமிழெனக் கொள்ள இயலாது என்பதை நற்றிறன் பெற்ற பொற்புடைச் செல்வர் மத்தியிலும் எடுத்துக்கூறத் தயங்கினாரில்லை. தூய தமிழ்ச் சொல்லையே பேச்சு, வழக்கிலும், எழுத்து வழக்கிலும் மேற்கொள்ளுமாறு தமிழன்பர்களைத் தூண்டினார். அதுகாறும் மணிப்பிரவாள நடையில் பேசுவதையும், எழுதுவதையுமே தூய தமிழ்த்தொண்டென முழங்கிய தமிழ்ப் பகைவரெல்லாம் பேராசிரியரின் தூய தமிழ்க் கொள்கைக்கு ஆற்றாது "நிலைப்பட்ட மெய்யுணர்வு நேர்ப்பட்ட போதில் அலைப்பட்ட ஆர்வமுதற் குற்றம் போலாயினார்," என்று ஒப்புமைப்படுத்திக் கூறுவது சாலப்பொருத்தமன்றோ!

இவ்வாறு தண்ணார் தமிழ்நலம் பேணுவதையே தமது வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்துவந்த போழ்து தான் இந்தியென்னும் செந்தீயைத் தமிழ்ச் சோலையில் பற்ற வைக்க நடுவணரசு எத்தனித்தது. அது கண்டு தமிழ்நாடே போர்க்கோலம் பூண்டது. பல்லோர் இந்தியை எதிர்த்துச் சிறை புகுந்தனர். இன்னுஞ் சில தன்னேரில்லாத் தியாகிகள் இந்தியை எதிர்க்கும் அறிகுறியாகத் தங்களையே மாய்த்துக் கொண்டனர். இந்திமொழி ஆதிக்கம் தமிழையும் தமிழர் நலனையும் பாதிக்கப்போகிறது, என்பதைக்கண்ட பேராசிரியரவர்கள் உள்ளம் கொதித்தெழுந்தார். குருதி சிந்தியும் தமிழ்மொழி காக்கத் தயாரானார். பேராசிரியர் பணியையும் அதன் மூலம் மாதா மாதம் கிடைக்கப்பெற்ற சற்றேறக் குறைய ஆயிரம் வெண்பொற்காசுகளைப் பற்றியும் எண்ணிப் பார்க்காது, தமிழ் காக்கும் போரில் தானே தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். அதனால் ஆத்திரம்கொண்ட—அப்பொழுது ஆட்சிபுரிந்த செங்கோலரசு பேராசிரியரைச் சிறைச்சாலையில் தள்ளியது. பேராசிரியர் பணியையும் அதிகாரத்தைப் பயன்

படுத்தி இழக்கச் செய்தது, என்றாலும் இலகு தமிழ்ப் புலவன் இதயத்தை இணைக்கவிட்டாரா என்றால், இல்லை என்றே துணிந்து கூறலாம். "மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை எம்மை மாட்ட நினைக்கும் சிறைச்சாலை" என்று முழங்கினார். கோலோச்சியவர்கள் கொடுங் கூற்றமெனச் சீறிய போழ்து "நாமார்க்கும் குடியல்லோம்; நமனை அஞ்சோம்; நரகத்தில் இடர்ப்படோம்." என வீரமுழக்கம் செய்தார். சின்னாட்களில் இந்தியென்னும் செந்தீயைக் கட்டாயமாக்க யாம் விரும்ப வில்லை என்று நடுவணரசு ஆறுதல் மொழி பகன்றது.

இதற்கிடையில் பேராசிரியர் குடும்பத்தைக் கொல்லும் வறுமையிலிருந்து காக்க எண்ணிய நற்றமிழ் ஆர்வலர்கள் பேரறிஞர் அவர்களின் சிறப்புச் சொற்பொழிவின் மூலம் பத்தாயிரம் வெண்பொற்காசுகளை நிதியாகத் திரட்டி அண்ணா அவர்களின் கையாலேயே ஐயா அவர்களுக்கு வழங்கினார்கள். அண்ணா அவர்கள் ஐயா அவர்களைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது தமிழ்ப்பகையைக் கடிந்து விரட்ட தமிழ்த்தரணி யில் போர்க்கோலம் பூண்ட பெருமை புலவர் சமுதாத்தில் பேராசிரியர் இலக்குவனாரையே சாரும் என்று வியந்து பாராட்டினார்கள். நன்றி தெரிவிக்க முற்படும் போழ்து பேரா சிரியரின் கண்களில் நீர்த்ததும்பியது. நன்றியுரையில் ஐயா அவர்கள் குறிப்பிட்டதாவது 'நீங்கள் எல்லாம் பண முடிப் புத் தந்து என்னை மகிழவைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளீர்கள். ஆனால் என்னுடைய நிலை குற்றக் கூண்டில் நிற்கும் குற்றவாளி யைப்போல் உள்ளது" என்று தழுதழுத்த குரலில் கூறினார். என்னவது ஒரு நாள் இப்பத்தாயிரம் வெண்பொற் காசுகளை யும் நேரிய உழைப்பின்மூலம் ஈட்டி மதுரைப் பல்கலைக் கழகத் தின் தமிழ் வளர்ச்சிப் பணிக்கு திரும்பக்கொடுக்க உறுதி யெடுத்துக்கொள்கிறேன், என்றும் இயம்பினார். "ஈயென இரத்தல் இழிந்தன்று; கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று என்பதைத் தன்னுடைய வாழ்வியல் உண்மை யாகப் போற்றிய காரணத்தாலேயே பணமுடிப்புபெற

நின்றதை குற்றக் கூண்டிலே நிற்கும் குற்றவாளியின் இயல் பிற்கு ஒப்பிட்டுக்கொண்டார். என்னே! அண்ணலாரின் அருந்தமிழ்ச் சான்றாண்மை.

ஆண்டு இரண்டு கடந்தன. தமிழ்நாட்டில் ஆட்சியும் மாறியது; தமிழ்நாட்டில் தமிழ் கற்ற ஒருவனே முதலமைச் சராய் ஆதல் வேண்டும்" என்ற பாவேந்தர் பாரதிதாசனின் கனவை நினைவாக்குவதுபோல் செஞ்சொற் தமிழ்க்கொண்டல் பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சரானார். தன்னேரில் லாத் தரணிபோற்றிய தலைவனும் அண்ணா அவர்கள் உலகத் தமிழ் மாநாட்டை சிறப்புற நடத்திய போழ்து பேராசிரி யரால் ஆங்கில மொழியில் ஆக்கப்பட்ட தொல்காப்பிய ஆராய்ச்சியை உலகோர் போற்றும் வண்ணம் வெளியிட்டு அண்ணலாரின் பெருமையை உலகறியச் செய்தார். இன்றமிழ் காத்த இலக்குவனாருக்கு ஏற்றதோர் பணியினைக் கொடுக்க வாய்ப்பு ஏற்படும் வரையில் தமிழ்ப் பேராசிரியராக மாநிலக் கல்லூரியில் இருக்குமாறு அண்ணா அவர்கள் அன்புடன் கேட்டுக்கொண்டார். பேராசிரியரும் நாலரைக்கோடி தமிழர் களின் நல்வாழ்த்தினைப்பெற்ற அண்ணா அவர்களின் நெஞ்சு நெகிழ்ந்த வேண்டுகோளை சிரமேற்கொண்டு மாநிலக் கல்லூரி யில் பேராசிரியர் பணியைத் தொடந்தார். முதல்வர் பொறுப் பேற்று ஆண்டு இரண்டுகூடக் கழியவல்லை. அண்ணா அவர்கள் தமிழர்களுக்கு தாங்கற்கரிய பேரிழப்பை ஏற்படுத்திய போன்று இயற்கையெய்தினார் பாரியை இழந்த கபிலரைப் போல்ஆனார் பேராசிரியர். வெள்ளைக்குடி நாகனாரைப்போலும் மாங்குடி மருதனாரைப் போலும், நக்கீரரைப் போலும் புல்லூற்றூர் எயிற்றியனார் போலும் இயற்கையிலேயே செவியறிவுறுத்தலை தனது நீங்காக் கடமையாகக் கொண்ட தாலோ என்னவோ தமிழ்ச்சுவையறியாப் பகுதியினர்க்கு தமிழ் பரப்பும் பெருநோக்கோடு செல்லநேர்ந்தது. ஆரியஅரசன் பிரகதத்தனுக்கு தமிழ்ச் சுவையூட்ட குறிஞ்சிப் பாட்டை கபிலர் பெருமான் இயற்றியதைப் போல தமிழ்ச்சுவையையூட்ட உசுமானியா பல்கலைக் கழகம்

சென்றனர் போலும். தமிழ்ப்பணிக்கு சலியா அத்தாங்கரும் தமிழ் உள்ளம் ஏனோ வெதும்பி தன் பாண்டித் தலைநகராம் சங்கத்தமிழ் மதுரைக்குத் திரும்ப நேரிட்டது. கானூர் மலையத்து அருந்தவன் கூறிய கன்னித் தமிழ் காக்க காலமெல்லாம் போராடிய எரிகதிர் நித்திலமாம் பேராசிரியர் இலக்குவனாரை ஏற்ற பணியில் மீண்டும் அமர்த்த விழைந்தார் அன்னாருடைய அருந்தமிழ் மாணவராம் தற்போதைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் என்றாலும் கலைஞர் அவர்களின் அந்நல்லெண்ணம் நிறைவேறுவதற்கு முன்பே பேராசிரியர் ஐயா அவர்கள் இயற்கை எய்தி விட்டார்.

பேராசிரியர் ஐயா அவர்கள் இளமைக் காலம் தொடங்கியே எதிர்நிச்சலுக்கு இலக்கானவராவர். கல்விபயின்ற காலத்திலிருந்து கல்லூரிப் பேராசிரியர் பணியில் அமர்ந்த காலம் முடிய குறிக்கோளுடைய வாழ்க்கையை நிலைநாட்ட அவர் அடித்த எதிர்நீச்சல் கொஞ்ச நஞ்சமல்ல என்பதைத் தமிழன்பர்கள் யாவரும் அறிவரன்றோ! இலக்குவனார் பேச்சில் உலையாய்த்தமிழ் உள்ளம் இருக்கும் ஒப்பற்ற உண்மை இருக்கும்; உற்றுழி உதவும் உயர்ந்த உலகியல் அறிவு இருக்கும்; வற்றாத் தமிழ்நெஞ்சம் இருக்கும், அட்டாலும் சுவை குன்றாத் தீஞ்சுவைப்பால் போல் ஒழுக்கம் தளராது-தமிழ்-உணர்வு குன்றாது- கடமை மறவாது வாழ்ந்து மன்னு உலகத்து மன்னுதல் குறித்துத் தம்புகழ் நிறீஇ தாம் மாய்ந்த பெரும்புலவர் இலக்குவனாராவர்.

அத்தகைய எதிர் நீச்சலிற்குக் கலங்கா எரிகதிர் நித்திலத்தின் பிறந்த நன்னாளை "தமிழெழுச்சி" நாளாகப் போற்றிக் கொண்டாடுவதே அன்னாருக்குத் தமிழன்பர்கள் ஆற்றும் தலையாய நன்றிக் க்டனாக அமையும் என்பதாம்.

...❦...